# எபிரெயர்

## (நமக்கு ஒருவர் இருக்கிறார்)




Bro. R. ஜோஸ்
மகாதானபுரம்
கன்னியாகுமரி
கிறிஸ்துவின் சபை

# எபிரெயருக்கு எழுதின நிருபம்

**முன்னுரை:**

**யார் இந்த எபிரெயர்கள்?**

எளிமையாக கூற வேண்டுமென்றால் எபிரெய மொழி பேசுபவர்கள்; அதாவது எபிரெய மொழியை தாய் மொழியாய் கொண்டவர்கள் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டனர் (பிலி 3:5; அப் 22:2,3). ஆபிரகாம் எபிரெயனாயிருந்தான் (ஆதி 14:13), ஆபிரகாமின் மகன் ஈசாக்கு, யாக்கோபும், அவனுடைய பிள்ளைகளும் எபிரெயர்கள் என அழைக்கப்பட்டனர். (ஆதி 43:32)

எபிரெயம் என்பது யுதர்களால் பேசப்பட்ட தனித்தன்மை வாய்ந்த மொழியாக இருந்தது. எபிரெயர் என்பது யுதமக்களை குறிப்பட பயன்படுத்தப்பட்டது. இந்த நிருபத்தில் எபிரெயர்கள் என்பது எபிரெய மொழி பேசும் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது; அதாவது யுத கிறிஸ்தவர்களைக் குறிக்கிறிது

**ஆசிரியர்:**

இந்த ஆசிரியர் தன்னுடைய பெயரை இந்த நிருபத்தல்  குறிப்பிடாத படியால் யார் இந்த நிருபத்தை எழுதியிருக்கிறார் என்பதை சரியாக கூற முடியவில்லை. ஆனால் இந்த ஆசிரியரை குறித்து சில குறிப்புகள் இந்த நிருபத்தில் நம்மால் பார்க்க முடிகிறது

1. இவர் தீமோத்தேயுவை நன்றாய் அறிந்திருந்தார், அவருடன் ஊழியம் செய்தார்.(எபி 13:23)
2. இந்த ஆசிரியர் கட்டப்பட்டிருந்தார் (எபி 10:34); இந்த நிருபத்தை பெற்று கொண்டவர்கள் இந்த நிருபத்தை எழுதியவருக்கு ஆஸ்திகளை கொடுத்து ஊழியம் செய்திருக்கிறார்கள்.இவர்களுக்கு இடையே நல்ல உறவு இருத்திருக்கிறது. இந்த நிருபத்தின் ஆசிரியர் இதை பெற்றுக்கொண்டவர்களை நன்றாய் அறிந்திருத்தார் (எபி 12:4; எபி 10:32; எபி 5:12), சீக்கிரமாய் இவர்களிடம் செல்லவும், இவர்களை காணவும் திட்டம் வைத்திருத்தார் (எபி 13:19; 23)
3. இந்த ஆசிரியர் நியாயப்பிரமாண (பழைய பிரமாணம்) சட்டங்களை நன்றாய் அறிந்திருந்தார் (எபி 9:5)
4. இந்த நிருபத்தின் கடைசியான வசனம் (எபி 13:25) பவுலால் வழக்கமாகப் பயன்படுத்தபடும் முடிவுரையாக இருக்கிறது (ரோம 16:24; 1 கொரி 16:23)

**எழுப்பட்ட காலம்:**

இந்த நிருபம் கி.பி 70ல் எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன்பு எழுதப்பட்டிருக்கலாம். கி.பி 70-யில் எருசலேம் அழிக்கப்பட்டது. எருசலேமின் வீழ்ச்சியை குறித்து எந்த குறிப்பும் செய்யப்படவில்லை என்பதால் இந்த நிருபம் எழுதப்பட்ட போது எருசலேம் இன்னமும் இருத்திருக்க கூடும். கி.பி 70யில் தேவாலய இடிப்பிற்கு பின்னர் தேவலாய பணிகள் அனைத்தும் நின்று போனது.

இந்த நிருபத்தை பெற்றுக்கொண்டவர்கள் யுத மதத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, தேவனுடைய பிள்ளைகளாய் மாறின கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது.

1. இவர்கள் பழைய ஏற்பாட்டை நன்றாய் அறிந்திருந்தனர் (எபி 8-11)
2. இந்த நிருபத்தை எழுதின ஆசிரியரை இவர்கள் நன்றாய் அறிந்திருந்தனர் (13:18-19)
3. தீமோத்தேயுவை அறிந்திருந்தனர் (13:23)

**நோக்கம் மற்றும் மைய கருத்து:**

இந்த நிருபத்தை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதின ஆசிரியர் எபி 13:22 -யில் இந்த வார்த்தைகளை புத்திமதியான வார்த்தைகள் என எழுதுகிறார், **“சகோதரரே, நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்” எபி 13:22.** இதை அறிவுறை எனவும் தேறுதலின் வார்த்தை எனவும், உற்சாகப்படுத்துதல் எனவும் நாம் கூறலாம்.

யுத மதத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களாய் வாழ்ந்துக்கொண்டிருந்த யுத கிறிஸ்தவர்கள், யூதர்களால் அநேக உபத்திரவங்களை அடைந்தனர் ( 1தெச 2:14,15; அப் 8:1). இந்த யூதர்கள் தேவனுடைய ஊழியத்திற்கு தடையாக இருந்தார்கள் (அப் 14:19; அப் 15:1). இந்த நிருபத்தை பெற்றவர்களும் மிகுந்த உபத்திரவத்தை அடைந்திருக்க வேண்டும்.(எபி 10:32,33). இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு கிறிஸ்தவர் தன்னுடைய விசுவாசத்தை விட்டு விலகிதன்னுடைய பழைய வாழ்க்கைக்கு சென்று விட கூடாது என்பதற்காகவும் (எபி 2:1-4; 6:4-6; 10:37,38). இந்த யுத கிறிஸ்தவர்கள் தங்கள் பட்ட உபத்திரவத்தினால் சோர்ந்து போயிருந்தனர் (எபி 11:12,13) என்பதினால் அவர்களை உற்சாகப்படுத்த, நாம் இப்பொழுது வந்திருக்கும் கிறிஸ்தவ மார்க்கத்தின் மேன்மையை கூறியும் (எபி 12:18-24), இயேசு கிறிஸ்துவின் மேன்மையான நிலை மற்றும் அவரது மேலான அதிகாரத்தையும் கொண்டு முடிவுபரியந்தம் நம்மை நிலைத்திருக்கும் படியாகச் செய்வதை இந்த நிருபத்தின் நோக்கம் .

திறவுக்கோள் வசனமாக நாம் எபி 3:14 -யை எடுத்துக்கொள்ளலாம். நாம் ஆரம்பத்தில் கொண்ட விசுவாசத்தையும், நம்பிக்கையையும் கடைசி வரை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்க வேண்டும். விலகி போக கூடாது (எபி 12:25), விசுவாசத்தில் உறுதியாய் இருக்க வேண்டும் என்பதே மைய கருத்தாக இருக்கிறது

**இந்த சபையாரிடம் இருந்த சில பிரட்சனைகள்:**

1. சபை கூடிவருதலை சிலர் விட்டு விட்டார்கள் (எபி 10:25)
2. விசுவாசவிலக்கம் என்ற அபாயத்தில் இருந்தனர் (எபி 2:1-4)
3. மீண்டும் பழைய வாழ்க்கைக்கு திரும்பும் அபாயம் இருந்தது
4. அவர்கள் வளர்ச்சி அடைய வேண்டியது இருந்தது (எபி 5:12-14)
5. அந்நிய போதனைகள் (எபி 13:9)
6. இவர்கள் சோர்ந்து போய் இருக்ககூடும் (எபி 10:32-34)

**இந்த நிருபம் நமக்காகவும் எழுதப்பட்டது:**

தேவன் இந்த நிருபத்தை நமக்கு கொடுத்திருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றி கூற வேண்டும்.. நாமும் கிறிஸ்தவ வாழ்க்கையை மன எழுச்சியுடன் தொடங்கியிருக்கலாம், ஆனால் காலம் செல்ல, செல்ல நம்மை சுற்றியிருக்கிற பாவமான உலகத்தினாலும், பாவத்தினாலும், பலவிதமான சோதனைகளினாலும், உபத்திரவத்தினாலும் நம்முடைய உற்சாகம் குறைத்திருக்கலாம், நாம் ஊக்கமிலத்து போயிருக்கலாம், நாம் விசுவாசமில்லாமலே தேவனை பின்பற்றும் பிரட்சனை நமக்கு இருக்கலாம்.

பாவம், உலகம் அளிக்கும் கேளிக்கை மற்றும் மன எழுச்சியை நாம் தவற விடுகிறோம் என்று நமது காதுகளில் குசுகுசுப்பாக பேசுகிறது. நாம் நமது வாழ்வின் பழைய வழிகளுக்குத் திரும்பிச் செல்லும் படி சோதிக்கப்படலாம்.

ஆனால் பொறுமையாய் இந்த நிருபத்தில் நமக்கு கூறியிருக்கும் புத்திமதிகளை பார்க்கும் போது. எதுவுமே கொடுக்க முடியாதா விசேஷித்த நன்மைகளை கிறிஸ்து என்கிற நம்முடைய பிரதான ஆசாரியரும், சகோதரனும், தேவனுடைய குமாரன் நமக்கு கொடுத்திருக்கிறார் என்பதை கற்றுக்கொண்டு விசுவாசத்தில் உறுதியாகவும், உற்சாகமாகவும் இருக்க இந்த நிருபம் நமக்கு போதிக்கிறது. நாம் எல்லாரும் தேவனைப் பிரியப்படுத்தவே விரும்புகிறோம்

**“ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்” – எபி 12:28.**

## அதிகாரம் 1

## எபிரெயர் 1:1-14

### I. கிறிஸ்து, தீர்க்கதரிசிகளிலும் மேலானவர் (1:1-3)

அ. (வச 1) **"பூர்வ காலங்கள்" –** sundry times ஆரம்பத்திலிருந்தே தேவன் மனிதர்களிடம் பல்வேறு வகையில் பேசிக்கொண்டு இருந்தார். நேரடியாகவும் பேசினார் (ஆதி 6:22), சொப்பனத்தின் மூலம் (ஆதி 37:5-11; தானி 2:28-34); தீரக்கதரிசிகளின் மூலமாகவும் பேசினார் (ஆமோஸ் 3:7; நெகே 9:30; 2 இராஜா 17:13); கழுதையின் மூலமாகவும் (எண் 22:28-30; 2 பேது 2:15,16); தேவன் மனிதர்களுடன் தன்னுடைய தொடர்பை ஆதியிலிருந்து கொண்டிருந்தார், தன்னுடைய விருப்பத்தையும், சித்ததை தீர்க்கதரிசிகளின் மூலமாய் தன்னுடைய ஐனங்களுக்கு வெளிப்படுத்தினார்.

ஆ. பழைய ஏற்பாட்டில் தேவனுடைய தீர்க்கதரிசிகளாய் இருந்த சில தேவமனிதர்களை குறிப்பிடவும்?

1. மோசே (உபா 18:18; அப் 7:37)
2. தாவீது (அப் 2:29-31)
3. சாமுவேல் (1 சாமு 3:19)
4. எலியா (ரோம 11:2,3)
5. எலிசா (1 இராஜா 19:16)
6. எசாயா (ரோம 9:29; லூக் 4:18)

இ. (வச 2) -யின் படி **"இந்த கடைசி காலமாகிய"** கிறிஸ்துவின் காலத்தில் (அ) கிறிஸ்துவ யுகத்தில் (அ) புதிய ஏற்பாட்டு காலத்தில் ( அப் 2:16,17; 1 பேது 1:20; எபி 9:26) யார் மூலமாய் நம்மோடு பேசுகிறார் நம்மோடு தன்னுடைய விருப்பதை வெளிப்படுத்துகிறார்? **"குமாரன்"** மூலமாய் நம்மோடு பேசுகிறார் ( 1 தெச 2:14; 1 கொரி 11:23; கலா 1:11). இது வேறு வழிகளில் தேவ கட்டளைகளைப் பெறுவதை நீக்கிப்போடுகிறது. தேவன் நம்முடைய மனதின் மூலமாகவோ, கனவின் மூலமாகவோ, வேறு கருவிகள் மூலமாகவும் நம்மோடு தொடர்பு கொள்வதில்லை. புதிய ஏற்பாடு இயேசுவின் வார்த்தைகளாய் இருப்பதால் , இதன் மூலமாகவே இயேசு நம்மோடு பேசுகிறார். ( 2 தீமோ 3:15-17; எபே 3:4-6; யோவா 16:13-15; யோவா 14:26 ).

ஈ. (வச 2,3) எப்படி இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசிகளை விட மேலானவராக இருக்கிறார்?

1. **"சர்வத்துக்கும் சுதந்தரவாளி –** heir of all things, உரிமை, அதிகாரம், சொத்து; குமாரனே சுதந்தரவாளி (மத் 21:38); சகல அதிகாரமும் இயேசுவிடமே

இருக்கிறது (மத் 28:18; எபே 1:20-22). அவரே எல்லாவற்றுக்கும் சொந்தக்காரம் (கொலே 1:16). சுதந்தரவாளி என்பது அவர் அடிமையில்லை என்பதை காண்பிக்கிறது (யோவா 8:35; கலா 4:6-7). தீர்க்கதரிசிகள் அடிமைகளாயிருந்தார்களா? இயேசு சொன்ன வார்த்தைகளை கவனியுங்கள் "பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான்" யோவா 8:34. தீர்க்கதரிசிகளோ, சொப்பணக்காரரோ எல்லாரும் பாவம் செய்தார்கள் (ரோம 3:25,26; எபி 9:15). இயேசு அடிமையில்லை, அவரிடம் பாவமில்லை பாவமன்னிப்பே அவருக்குள் நமக்கு இருக்கிறது (எபே 1:7). இயேசு தீர்க்கதரிசிகளை விட மிகவும் மேலானவர் **அவர் சுதந்திரவாளி.**

2. **"உலகங்களை உண்டாக்கினார்" –** இது இயேசு சிருஷ்டி கர்த்தா என்பதை காண்பிக்கிறது (யோவா 1:3; 1கொரி 8:6; ஆதி 1:26). காலங்களையும், நேரங்களையும் எல்லாவற்றையும் அவரே உண்டாக்கினார் (கொலே 1:16); எந்த தீர்க்கதரிசியாவது நாம் இரவில் பார்க்கிற நட்சந்திரங்களையாவது, நிலவையாவது உண்டாக்க முடியுமா? இயேசு தீர்க்க தரிசிகளை விட மேலானவர்.
3. **"அவருடைய மகிமையின் பிரகாசம்" –** இயேசு தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருந்தார், இது இயேசுவின் தேவத்துவத்தை காண்பிக்கிறது. இயேசு மாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனாயிருந்தார். (1 தீமோ 3:16) யாத்திராகமம் 40:35-யில் தேவனுடைய மகிமை ஆசாரிப்பு கூடாரத்தை (வாசஸ்தலம்) மூடியதினால் மோசேயினால் ஆசாரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்க முடியவில்லை. மோசேயினால் தேவனுடைய முகத்தை பார்க்க முடியாத்தாய் இருந்தது (யாத் 33:18-23)ஆனால் இயேசு அப்படி அல்ல அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருக்கிறார் (யோவா 14:7-9). தேவனுக்கு சமமானவராய் இருக்கிறார் (பிலி 2:6)
4. **"அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து"-** "தேவனை ஒருவனும், ஒருக்காலமும் கண்டதில்லை" என யோவா 1:18 -யில் நாம் வாசிக்கிறோம். இயேசுவே தேவனை நமக்கு வெளிப்படுத்துகிறார். இயேசுவின் வாழ்க்கையின் மூலமாகவும், அவருடைய ஊழியத்தின் மூலமாகவும், அவருடைய குணத்தின் மூலம் தேவன் வெளிப்பட்டார் (யோவா 14:9-11). இயேசுவுக்குள் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாகத் வாசமாயிருக்கிறது (கொலே 2:9)எந்த தீர்க்க தரிசிக்காவது இது பொருந்துமா? முடியவே முடியாது.
5. **"சர்வத்தையும் வல்லமையுள்ள வசனத்தினால் தாங்குகிறவர்" –** சர்வம்-சகலத்தையும், அண்டம்; மோசேயினால் இஸ்ரவேல் ஜனங்கெல்லாரையும் தாங்க முடியவில்லை; அவர்களுடைய பாரத்தை அவனால் சுமக்க முடியவில்லை (எண 11:11-15), எலியாவும் இதைப்போல தான் ( 1 இராஜா 19:4); மோசேயின் கைகள் அசந்து போயிற்று (யாத் 17:12). ஆனால் இயேசு

இவர்கள் எல்லாரையும் பார்க்கிலும் மேலானவர். அவர் சர்வத்தையும் தாங்குகிறார். அவர் படைப்பாளி மாத்திரம் இல்லை, அவர் எல்லாவற்றையும் தாங்க கூடியவர். அவர் எல்லாருடைய பாவங்களையும் சுமந்தார் ( 1 பேது 2:24), ஒரு மனிதனுடைய பாவத்தின் எடை எவ்வளவு? (சங் 38:3,4); அவருக்கு மேலேயே நாம் கட்டப்பட்டிருக்கிறோம் ( 1 கொரி 3:11; எபே 2:20-22; கொலே 2:6); நாம் இயேசுவினால் காக்கப்பட்டிருக்கிறோம் (யுதா 1:4), அவரே நமக்கு இளைப்பாறுதல் தருபவர் (மத் 11:28-30); இயேசு வருவார் என்கின வார்த்தையே இந்த பூமியை காத்துக்கொண்டிருக்கிறது ( 2 பேது 3:5-7). இயேசுவே அவருடைய வசனத்தினால் தினமும் நம்மை தாங்குகிறார்ந மேலும் சில வசனங்கள் (சங் 31:23; சங் 3:5; எபி 13:5; 2 தீமோ 4:18)

6. **“தம்மாலே தாமே பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டு பண்ணி” –** சிலுவையில் சித்தப்பட்ட இயேசுவின் இரத்தமே எல்லா மனிதர்களின் பாவத்தை போக்க கூடியது (எபே 1:7). தீரக்க தரிசிகளின் பாவத்தையும் சேர்த்தே. இந்த இரத்தமே நமக்காக நன்மையானவைகளை பேசுகிறது (எபி 12:24)
7. **“வலது பாரிசத்தில் உட்கார்ந்தார்” –** இந்த இடம் அதிகாரமும், வல்லமை உள்ள இடம். நாம் அனைவருமே, அவருக்கு கீழ்பட்டு இருக்கிறோம் (எபே 1:20-23; பிலி 2:8-11)

உ. இயேசு கிறிஸ்து தீர்க்கதரிசிகளை விட மேலானவர் என்பது என்னை எப்படி ஊக்கப்படுத்துகிறது/பலப்படுத்துகிறது?

1. உத்தரவாதம் மற்றும் நிச்சயம்; இயேசுவின் வார்த்தைகளின் படி நடக்கலாம் என்பதற்கு உத்தவாதமாய் இருக்கிறது.
2. தீர்க்கதரிசிகள் யாரை பற்றி தீர்க்கதரிசனங்கள் கூறினார்களோ; அவருடைய வார்த்தைகள் நம்மை வழி நடத்துகிறது.
3. தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் மரித்தார்கள்; ஆனால் இயேசு கிறிஸ்து மரிப்பதில்லை (எபி 7:25);
4. இது இயேசு கூறின வார்த்தைகள் என்னை ஏமாற்றாது என்பதை காண்பிக்கிறது. இயேசு நம்முடைய நம்பிக்கை (1 தீமோ 1:1)
5. இயேசுவின் வார்த்தைகளே நம்மை நியாயத்தீர்க்க போகிறது (யோவா 12:48); நாம் எந்த வார்த்தையின் படி நடந்துக்கொண்டு இருக்கிறோமோ அது உறுதியாக்கப்பட்டது. (எபி 2:4; 2 பேது 1:16-19). இதுவே கடைசியான வார்த்தைகள், இதற்கு ஒருவன் கீழ்படியும் போதே இரட்சிப்பை பெற முடியும். இயேசுவின் வார்த்தைகள் ஒரு போதும் அழியாது. (மத் 24:35)

**கருத்து:** பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த தேவனுடைய மனிதர்கள் போல இல்லாமல் தேவன் நமக்கு அவருடைய குமாரன் மூலமாய் பேசியிருக்கிறார். இயேசு தீர்க்கதரிசிகளிலும் மேலானவராய் இருப்பதால், அவருடைய வார்த்தைகள் நமக்கு திட நம்பிக்கையாயிருக்கிறது, அது நமக்கு நாம் செய்வது (அவருடைய வார்த்தையின் படி நடப்பது) சரியானது என உறுதியாயிருக்கிறது. நம்மோடு பேசுகிற பேசுகிற இயேசுவின் வார்த்தைகள் நம்மை முன்னோக்கி செல்ல உத்வேகப்படுத்துகிறது. (உ.தா) யோவா 6:54 -யில் இதை செய்கிறவனுக்கு நித்திய ஜீவன் என கூறியிருக்கிறார். இதை இயேசுவே நம்மிடம் கூறியிருப்பதால்; அவர் தீர்க்க தரிசிகளிலும் மேலானவராய், தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருப்பதால் இதில் சொல்லப்பட்டடப்படியே நாம் செய்ய நம்மை ஊக்கப்படுத்துகிறது, நம்பிக்கை கொடுக்கிறது, ஏனென்றால் தேவன் மனம்மாற மனிதன் அல்ல.

**II. கிறிஸ்து, தேவ தூதரைப் பார்க்கிலும் மேலானவர் (1:4-14)**

அ. இயேசு கிறிஸ்துவின் விசேஷித்த (excellent) நாமம் என்ன?

1. எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் (பிலி 2:11)
2. அவருடைய நாமத்தில் வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்குகிறது (பிலி 2:10)
3. இந்த நாமத்தினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம், வேறே யாருடைய நாமத்தினாலும் இல்லை. (அப் 4:12)
4. அவர் கர்த்தாதி கர்த்தர், ராஜாதி ராஜா (வெளி 19:16)
5. இயேசு குமாரனாயிருக்கிறார் (வச 6)

ஆ. வசனம் 4- யின் படி இயேசு யாரை விட மேன்மையானவர்?

1. தேவதூதர்கள் பார்க்கிலும் மேன்மையானவர்.
2. தேவதூதர்கள் குறிப்பிட்ட நோக்கத்திற்காக சிருஷடிக்கப்பட்டுள்ளனர் (வ 7,14). ஆனால் இயேசு கிறிஸ்து எல்லாவற்றையும் படைத்த சிருஷ்டிக்கர் (1:10-12)

இ. வச 5-14 -யிலிருந்து தேவதூதர்களை விட இயேசுவின் மேன்மையான நிலையை குறிப்பிடவும்?

1. **அவர் குமாரனாயிருக்கிறார் (வ 5):**

   இயேசு படைக்கப்பட்டவர் அல்ல, அவர் ஆதியிலிருந்தே இருக்கிறார் (யோவா 1:1; யோவா 8:58)பார்க்கவும் யோவா 17:5,24. இயேசு பிதாவுக்கு சம்மானவராகவே இருக்கிறார் (யோவா 10:29-33; யோவா 5:18). இயேசு நித்தியமானவர் (மாகா 5:2; எபி 1:12). உயிர்தெழுதலின்

மூலமே அவர் தேவகுமாரனாயும், ஜெநிப்பிக்கப்பட்டவராயும் இருக்கிறார். தேவன் இயேசுவை பெற்றெடுத்தார் என்று இதற்கு அர்த்தமில்ல (ரோம 1:5; அப் 13:30-33; வெளி 1:5). எந்த தூதரையும் தேவன் எழுப்பவில்லை, அந்த தூதர்கள் குமாரனாயிருப்பதில்லை.

2. **"தேவதூதர்கள் இயேசுவை தொழுதுக்கொள்ளக்கடவர்கள்" (வ 6)** - இயேசு கிறிஸ்து தொழுதுக்கொள்ள பாத்திரவானாக இருக்கிறார் (சங் 18:3; வெளி 5:11,12). இயேசுவை தேவதூதர்கள் தொழுதுக்கொள்வார்கள் என்பது இயேசுவின் மேலான நிலையை குறிக்கிறது. (லூக் 2:9-14; மத் 2:11. தூதர்களுக்கு அவர் கட்டளையிடுவார்கள் (மத் 24:30,31). தொழுதுக்கொள்ளுதல் என்பது பணித்துக்கொள்ளுதலை குறிக்கிறது. மத் 4:10
3. **"குமாரன் தேவனாயிருக்கிறார்" –**
   a. பார்க்கவும் யோவா 5:18; எசா 9:6; ரோமா 9:5; 1 யோவா 5:20); ஆராதிக்க பாத்திரவான் (மத் 4:10).
   b. நீதியுள்ள செங்கோல் உடைவர் (வ 8 = சங் 45:6ர7) – இயேசுவின் அதிகாரத்தை அடையாளப்படுத்துகிறது. இயேசு பூமியை தனது வாயின் கோலால் அடிக்கிறார், நீதி அவருக்கு அரைக்கட்டு (எசா 11:4,5). இயேசுவின் சிங்காசனத்திற்கு, முடிவுயில்லை (தானி 7:13,14; மத் 16:18)
   c. ஒரு இராஜ்யத்தை ஆளுகிற ராஜாவிடம் ஜனங்கள் எதை எதிர்பார்ப்பார்கள்? நீத்யில்லாத கொடுரமான இராஜாவின் இராஜ்யத்தை யோசித்துப்பாருங்கள் (1:9 அ; சக 6:12,13) அக்கிரமத்தை வெறுக்கிற ராஜா எப்படுப்பட்டவர்? (வ 1:9 அ)
4. **"ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" (வ 9)** – ஒருவர் அதிகார நிலையில் நியமிக்கப்படும் போது எண்ணெய் பயன்படுத்தபட்டது (1 சாமு 10:1). இயேசுவின் உன்னத நிலையை குறிக்கிறது (எபே 1:20)
5. **இயேசு சிருஷ்டிகராய் இருக்கிறார்** (வ 10= சங் 102:25-27). இயேசு தேவனுடைய வார்த்தையாக இருக்கிறார். அந்த வார்த்தையினால் உலகம் உண்டாக்கபட்டது (எபி 11:3; யோவா 1:1-3)
6. **"இயேசு மாறாதவராயிருக்கிறார்" முடிவில்லாதவராயிருக்கிறார்" (வ 11,12)** – இயேசுவால் படைக்கப்பட்ட இந்த உலகத்திற்கு என்னவாகும்? அழிந்துபோம், பழைமையாப் போம், மாறிப்போம் ( 2 பேது 3:10-12). நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூமியானது நிலையற்றதாக இருக்கிறது மாத்திரமல்லாமல் அது பழைமையாக போய் கொண்டிருக்கிறது. ஒரு

துண் பழையது ஆவது போலவே. ஆனால் இயேசு தமக்காக நிலைத்திருக்கிறார், அவர் மாறாதவராயிருக்கிறார், அவர் முடிந்மு போவதில்லை (7:25; 13:8) எதன் மீது நம்முடைய நம்பிக்கை வைப்பது? நிலைத்திருப்பவர் மீதா? நிலையற்றதின் மீதா?

7. **“வலது பாரிசத்தில் உட்காத்திருக்கிறார்” (வ 13)** – நமக்காக இருக்கிறவர் உன்னதமான இடத்தில் இருக்கிறார். தேவதுதரை பார்க்கிலும் (எபே 1:19-23)

ஈ. தூதர்களின் வேலை என்ன? (வ 14)

தூதர்கள் தேவனுடைய பிள்ளைகளுக்கு பணிவிடைய செய்கிறவர்களாயிருகிறார்கள் (சங் 91:11; மத் 18:10; அப் 12:7) தேவனுடைய செய்தியை கொண்டு வருபவர்கள்.

**III. இயேசு தேவ தூதர்களிலும் மேன்மையானவர் என்கிற உண்மை தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை தைரியப்படுத்தி அவர் மீது நம்பிக்கை கொள்ள செய்கிறது.**

இப்படிப்பட்ட மேன்மையான இராஜாவின் இராஜ்யத்தில் இருக்கிற கிறிஸ்தவர்களாகிய நாம் , அவரை விட்டு அழிந்து போகிற , மாறிபோகிற உலக வழக்கத்திற்கு திரும்பி போகிறது (கொலே 2:20-23). எவ்வளவு மதியீனமான செயல். இப்படிப்பட்ட மனிதன் மேல் நீங்கள் கோப்ம கொள்வீர்களா? நாம் இப்படு செய்யலாமா? தேவனுடைய கேள்விக்கு பதில் கூற முடியுமா? (எரே 2:6)

என்றென்றைக்கும் நிலைத்திருப்பதன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். விக்கிரகாகங்களை விட் நம்முடைய பிதா முற்றிலும் மாறுப்பட்டவர்.

**கேள்விகள்**

1. இயேசுவின் தீர்க்க தரிசிகளிலும் மேலான நிலையை குறிப்பிடவும் ? (7 புள்ளிகள்)
2. இயேசுவன் தூதர்களிலும் மேலான நிலையை குறிப்பிடவும்? (7 புள்ளிகள்)

## அதிகாரம் 2

## எபிரெயர் 2:1-18

### I. முதலாவது எச்சரிக்கை (2:1-4):

அ. **"ஆகையால்" (வ 1) –** நம்மோடு பேசுகிற இயேசு (1:2). தீர்க்கதரிசிகளை விடவும், தூதர்களை விடவும் மேன்மையுள்ளவராய் இருப்பதால். நாம் அவரை விட்டு விலகாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

ஆ. நாம் ஏன் கேட்டவைகளை விட்டு விலக கூடாது( ஆங்கிலத்தில் நழுவ விடாதீர்கள்)? (வ 2-4)

1. **"தேவ தூதர் மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனத்திற்கு" (வ 2) –**

   அ. நியாயப்பிரமாணம் தேவதூதர்கள் மூலமாய் கொடுக்கப்பட்டது, தேவன் தூதர்களை பயன்படுத்தினார் (அப் 7:53; கலா 3:19; யாத் 33:2)

   ஆ. அந்த பழைய பிரமாணம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது (உபா 4:1-2,8; யாத் 31:18)
2. இந்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படியாதாவர்களுக்கு நீதியான தண்டனை வந்தது (எண் 15:31; எபி 10:28)
   a. ஒய்வு நாளில் விறகுகளை பொறுக்கிக் கொண்டிருந்த மனிதன் செத்தான் (எண 15:32-36)
   b. உசியா ( 2சாமு 6:7)
   c. நாதாவும் அபியூவும் (லேவி 10:1,2)
   d. இஸ்ரவேல் ஜனங்கள் (1 கொரி 10:5-10)
3. "கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு" –
   a. புதிய உடன்படிக்கை இயேசுவின் மூலமாய் கொடுக்கப்பட்டது. இயேசு நமக்கு தேவனின் கட்டளைகளை வெளிப்படுத்தினார் (யோவா 12:48-50; யோவா 17:8,14; மத் 28:20; ரோம 8:2). இயேசுவினால் கூறப்பட்ட இந்த வார்த்தைகளையே அப்போஸ்தலர்கள் நமக்கு அறிவித்து (கலா 1:11,12; 1 கொரி 1:23; 1 தெச 4:1,2), அதை உறுதிப்படுத்தினார்கள் (1 கொரி 2:5; மாற் 16:20). நமக்கு தேவதூதர்கள் வசனத்தை கொடுக்கவில்லை மாறாக தேவத்தூதர்களை பார்க்கிலும் மேலான இயேசுவினால் வசனத்தை பெற்றியிருக்கிறோம். இந்த இரட்சிப்பின் வசனங்களை உற்றுப்பார்க்க தேவதூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள் (1 பேது 1:9-12).
4. நம்முடை "பெரிதான இரட்சிப்பை குறித்து தேவன் எவ்விதம் சாட்சி கொடுக்கிறார்? (வ 3,4)

a. அடையாளங்களில், அற்புதங்கள் பலவிதமான பலத்த செய்கை (ரோம 15:18; அப் 5:12)
b. சித்தத்தின் படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்கள் (அப் 5:32; அப் 2:4; அப் 8:18; அப் 19:6,7)

வீ.பா : முதல் நூற்றாண்டில் நடந்த பலவித பலத்த செய்கைகளை பட்டியலிடவும்?

5. “தண்டனைக்கு எப்படித் தப்புத்துக் கொள்ளுவோம்” (வ 4) –
   a. “தப்பித்துக்” (escape)- ஓடிப்போகுதல் (அப் 16:27); இதே கிரேக்க வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
   b. தேவதூதர்கள் மூலமாய் கொடுக்கப்பட்ட வசனத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு நீதியான தண்டனை வந்தது (வ 2). அதை பார்க்கிலும் மேலான ஒருவராலே வசனத்தை பெற்று, அவர் நம்முடைய இரட்சிப்பிற்காக மரித்து அந்த இரட்சிப்பை குறித்து கவலையற்று, விலகி போனால் (வ 1) தேவனுடைய தண்டைனைக்கு தப்ப முடியாது (ரோம 2:3)
   c. தேவன் தப்பவிடாமல் தண்டித்ததிற்கு சில உதாரணம்:
      i. பாவஞ் செய்த தூதர்கள் ( 2 பேது 2:4; யுதா 6)
      ii. பூர்வ உலகத்தை (2 பேது 2:5)
      iii. சோதோம் கொமோரா ( 2 பேது 2:6; யுதா 7)
      iv. இஸ்ரவேல் ஜனங்கள் (யுதா 5)

**கருத்து:** நமக்கு இருக்கும் ஒரே பாதுகாப்பு இயேசு மட்டுமே. தேவனுடைய கோபத்திலிருந்து தப்பிக்கொள்ள இயேசுவை பற்றிக்கொள்வது மட்டுமே ஒரு வழி (சங் 2:12; எபே 1:7,8). அவரை விட்டு விலகுவது எரிந்துக்கொண்டிருக்கும் ஆக்கினி ஜீவலையில் (தேவ கோபம்) விழுவதற்கு சமம்.

## II. இயேசு நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் (2:5-18)

அ. மனிதர்களின் நிலை (2:5-8)

1. உலகம் தூதர்களுக்கு கீழ்ப்படுத்தவில்லை (வ 5)
2. மனிதன் தேவனுக்கு முன்பாக ஒன்றுமே இல்லை. அவன் எம்மாத்திரம் (யோபு 25:6; யோபு 7:17,18; சங் 103:14-16)
3. தேவன் மனிதனை “நினைக்கிறார்” நமக்காக இயேசுவை கொடுத்திருக்கிறார் (யோவா 3:16)
4. தேவதூதரிலும் சற்று சிறியவனாக இருக்கிறான் (வ 7)

a. “சற்று” – மனிதன் பூமியில் இருக்கும் காலம் வரையிலும் சில விதத்தில் தூதர்களுக்குத் கீழானவனாக இருக்கிறான்

5. “கனத்தினாலும், மகிமையினாலும், முடி சூட்டி” (வ 7) – (ஆதி 1:28; ஆதி 2:7,15,19)
6. “அதிகாரி... பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டுகிறது” (வ 7) – தேவன் மனிதர்களை ஆளாக் கூடியவர்களாக உண்டாக்கினார் (ஆதி 1:26-28; சங் 8:5-8). பூமியிலுள்ள பிற ஜீவராசிகள் அனைத்தும் மனித இனத்தின் ஆளுகையின் கீழ் உள்ளன. ( உ.தா: மனிதனை விட மிகப் பெரிய யானையை அவன் கீழ்ப்படுத்துகிறான்)
7. “சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்” (வ 8) – எல்லாம் அவனுக்கு கீழ்படியவில்லை, தேவன் அவனை ஆளாக் கூடியவனாக படைந்தாலும், அவனுடைய இச்சையினால் பாவத்திற்கு அடிமையானவானக இருக்கிறான் (ரோம 6:17). பாவமே மனிதனை மரணத்திற்கு அடிமையாக்குகிறது (எபி 2:14,15; ஆதி 3:19). பாவம் நம்மை அடித்துக்கொண்டு செல்கிறது (எசா 64:6) பாவம் சரீரத்தில் ஆளாக்கூடியதாக இருக்கிறது ( ரோம 6:12

ஆ. நமக்கான உதவி (2:9-18):

1. தேவனுடைய கிருபையால் (தகுதியற்றவர்களை, தகுதிப்படுத்தல்) இயேசு நமக்கான என்ன செய்தார்? (வ 9)
   a. “ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும் படிக்கும்” – இயேசு நமக்காக மரித்ததினால் பாவத்தை ஆளுகை செய்யும் வாய்ப்பு நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது (1 கொரி 15:54-57; ரோம 5:17). இயேசுவின் மரணத்தினால் பிசாசின் கிரஇியைகள் அழிக்கப்பட்டது (1 யோவா 3:8; எபி 2:14,15)
   b. “மரணத்தை உத்தரித்ததினிமித்தம்” – இயேசு மரணத்தை ஜெயித்திருக்கிறார் (ஒழித்தல்) (2 தீமோ 1:10). பாவத்தினால் மரணம் வந்தது. மரணம் மனிதர்கஙளை ஆண்டு கொண்டது (ரோம 5:12-14). ஆனால் இயேசு மரணத்தை ஜெயித்ததினால், அவருடைய வார்த்தையின் நடக்கிற அவருடைய தேவனுடைய பிள்ளைகள் மரண பயத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறார்கள் (எபி 2:15; யோவா 8:51). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது இனி இருப்பதில்லை ( 1 கொரி 15:51-57). மரணம் ஒழிக்கப்பட்டது.
   c. இயேசு ஏன் தேவதூதர்களிலும் சற்று சிறியவராக்கப்பட்டார்? நமக்காகவும், நம்முடைய மீட்பிற்காகவும் (மத் 20:28; பிலி 2:6-7)

2. தேவன் நம்மை மகிமையினால் (தேவனுடைய பிள்ளைகள் ) கோண்டு வர என்ன செய்தார்? (வ 10; 2 தெச 2:14; யோவா 1:12,14). நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை (தீத் 2:13) உபத்திரவங்களினால் பூரணப்படுத்துகிறது (எபி 4:15; 5:8,9). அவருக்கேற்றதாயிருந்தது. நம்முடைய பாவங்களின் தண்டனை அவர் அடைந்தார் (ஏசா 53:4-6; 10-11).

   a. இயேசுவை பூரணப்படுத்தியது எது? எபி 5:8,9

      i. உபத்திரவங்கள்

      ii. பாடுகள்

      iii. சோதனைகள் மேற்கொண்டதினால்

      iv. பூரணப்படுத்தப்பட்டார்., நாமும் சோதனைகளையும்பாடுகளையும், மேற்க்கொள்ள வேண்டியது அவசியம். ஒருவரை உலக பிரகாரமான பெரிய பதவிகள் நியமிக்க அவர்களுக்கு என்னென்ன சோதனைகளை (TEST) வைக்கிறார்கள்? அவர் அதில் வெற்றிக்கொள்ளும் போதே அதில் நியமிக்கப்படுகிறார். இயேசு பூரனப்படுவதற்கு சரீரத்திலும், மனதிலும், சிந்தையிலும், ஆவியிலும் சோதிக்கப்பட்டு வெற்றிப்பெற்றார் (எபி 4:15). இவரே நம்முடைய இரட்சிப்பின அதிபதியாக இருக்கிறார்/ இருக்க முடியும்.

**கருத்து:** நாமும் பல்வேறுப்பட்ட சோதனைகளினால் கஷ்டப்படலாம்; ஆனால் நாம் அதை மேற்க்கொள்ளும் போது நம்முடைய விசுவாசத்தை நிருபிக்க வேண்டும்.

**வீ.பா:** இயேசு நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாக இருக்க எவ்விதத்தினால் எல்லாம் சோதிக்கப்பட்டு வெற்றிக்கொண்டார் ? (எபி 4:15; எபி 5:8,9)

**3.** இயேசு நம்முடைய சகோதரராய் நமக்கு கைக்கொடுத்திருக்கிறார்? (2:11-18)

   **a.** இயேசு நம்மை யார் என சொல்ல வெட்கப்படவில்லை? ஏன்?

      **i.** சகோதரரென்று சொல்ல (மத் 12:50)

   **b.** பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ் செய்யப்படுகிறவர்களும் ஒருவராலே உண்டாயிருக்கிறார் (ஏற்ப்படுத்தப்பட்டுயிருக்கிறார்கள்) – இயேசுவின் மூலமே இரட்சிப்பு என்பது தேவன் ஆதியிலேயே ஏற்ப்படுத்தினார் (கலா 4:5-7; ரோம 8:15-18; எபி 1:4-7)

**c.** நாம் இயேசுவுக்கு சகோதரர்களாய் கொடுக்கப்பட்ட தேவனின் பிள்ளைகள் (வ 12,13; யோவா 17:2,6; சங் 22:22)

   **i.** இயேசுவோடு சேர்ந்து நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்பதும், அவர் நமக்கு தேவனை அறிவித்து கிறிஸ்துவினால் தேவனுடைய பிள்ளைகளாய் மாறி, இயேசுவின் சகோதராய் அவரோடுஉறவுக்கொண்டுள்ளோம் (கலா 4:5-7). இழந்துவிட கூடாது.

**d.** இயேசு ஏன் மாம்சத்தையும், இரத்ததையும் உடையவரானார் ? (வ 14,15)

   **i.** பிசாசானவனை தமத் மரணத்தினாலே அழிக்கும்படி- (1 யோவா 3:8; யோவா 12:31-34)

   **ii.** காலாமெல்லாம் மரணபயத்தினால் அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைப்பண்ணும் படி (2:9: மத் 20:28) – மனிதர்கள் மத்தியில் மரணம் என்பது பயத்திற்குரியத்தாய் இருக்கிறது. இந்த மரணம் என்பதை வைத்தே பிசாசு ஏவாளை ஏமாற்றினான் (ஆதி 3:4), மரண பயத்தினாலே பிசாசு தந்திரமாய் விளையாடிக் கொண்டிருக்கிறேன் (ஆதி 25:31; மத் 4:3-6). ஆனால் இயேசு மரணம் அடைந்து, உயிர்தெழுத்து மரணத்தை வெற்றிக்கொண்டு (2 தீமோ 1:10). ஜீவனை நமக்கு வெளிப்படுத்தியதினால் பிசாசின் கிரியைகள் அழிக்கப்பட்டன. நாமும் இயேசுவினால் பிசாசை வெற்றிக்கொள்கிறோம் (ரோம 16:20). பவுல் தன்னுடைய மரணத்தை பயத்தோடு பார்க்காமல் சந்தோஷத்தோடு பார்த்தார் என்பது பிசாசின் தோல்வி அடைந்தான் என்பதை காண்பிக்கிறது ( 2தீமோ 4:6-9; பிலி 1:21); பேதுரு (2 பேது 1:12-15); கிறிஸ்தவர்கள் (ரோம 16:4) நம்முடைய நம்பிக்கையும் இதுவே (2 தீமோ 4:18)

**e.** (வ 16-18) இயேசு யாருக்கு உதவியாகக் கைகொடுத்தார்? ஏன் அது நமக்கு முக்கியமானது?

   **i.** குறிப்பு: கை கொடுத்தார் – இதே வார்த்தை மத் 14:31; மாற் 8:23 பயன்படுத்தப்பட்டுள்ளது.

   **ii.** “தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல் (வ 16 = யுதா 6)

**iii.** (வ 16) "ஆபிரகாமின் சந்ததிக்கு கைகொடுத்தார்" – இன்று கிறிஸ்தவர்களே ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியாய் இருக்கிறார்கள். (கலா 3:7,14; ரோம 9:6-8). பாவத்தின் அடிமைதனத்திலிருந்த நம்மை அவர் தேவனுடைய பள்ளை என்கிற மேலான இடத்திற்கு கொண்டு வந்திருக்கிறார் (வ 10-13). இன்னும் அவர் நமக்கு உதவி செய்கிறார் (எபி 7:25). அவர் நம்மை தாங்குகிறார் (1:3). அவரே நம்முடைய மத்தியஸ்தர் (1 தீமோ 2:5)

**iv.** இயேசு இரக்கம், உண்மையுள்ளவராய் பிரதான ஆசாரியராய், நம்முடைய சகோதரராய் இருக்கிறார் (வ 17)

v. அவர் நம்மை போல் சோதிக்கப்பட்டவர் என்பதால், அவர் நமக்கு உதவி செய்ய வல்லவர் (வ 18) – என்னுடைய பலவீனங்களை குறித்து அவர் இரக்கமுடையவராய் எனக்காக தேவனிடம் பேசிக்கொண்டு இருக்கிறார் ( 1யோவா 2:1,2; யோவா 8:3-11; லூக் 7:36-47). அவர் நமக்கு உதவி செய்யும் கண்மலை சங் 121. மேலும் 2 தீமோ 4:18. இவரே விட்டு விலகி போகாமலிருக்க எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

## அதிகாரம் 3

## எபிரெயர் 3:1-19

### I. இயேசு மோசேயை விட பெரியவர் (3:1-6)

அ. மோசே தேவனுடைய வீட்டில் எப்படிப்பட்டவனாயிருந்தான்? (வ 2,5)

1. எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் (யாத் 40:16)
2. பணி விடைக்காரனாய் இருந்தான்
3. மோசே தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் மத்தியஸ்தராய் இருந்தான் (அப் 7:34-38). இவன் உண்மையுள்ளவன் என தேவன் சாட்சி கொடுத்தார் (எண் 12:1-7)

ஆ. **"இப்படியிருப்பதால்" (வ 1)** – முந்திய அதிகாரத்துடன் தொடர்படுத்துகிறது. நமக்கு உதவி செய்யும் இயேசு எல்லாவற்றிக்கும் மேலானவராய் இருப்பதால் நாம் இயேசுவை கவனிக்க வேண்டும்.

இ. எப்படி இயேசு மோசேயை விட பெரியவராயிருக்கிறார்? (வ 2-6)

1. இயேசு தேவனுக்கு உண்மையுள்ளவராயிருந்தார் (3:2; யோவா 7:15-18).
2. நடைமுறை பயிற்சி: இவர்களைப்போல நாம் எந்த இடத்தில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும்?
3. மோசே தேவனுடைய வீட்டில் பணிவிடைக்காரனாய் உண்மையாயிருந்தான். ஆனால் இயேசு அந்த வீட்டில் மேலானவராய் குமாரனாயிருக்கிறார் (வ 3-6)

ஈ. இயேசுவை கவனிக்கும் போது (3:1). அவர் மோசேயைப்போல உண்மையுள்ளவராய், தேவனுக்கு இருந்தார்; ஆனால் இயேசுவுக்கு, மோசேக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறது. மோசேயைவிட இயேசு மேலானவராய் குமாரனாயிருக்கிறார் என நான் கற்றுக்கொள்கிறேன். இப்பொழுது நான் செய்ய வேண்டியது என்ன? (வ 6) நான் செய்ய வேண்டியது கிறிஸ்துவின் மீது உள்ள என நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருப்பது. அப்பொழுது நானே தேவனுடைய வீடாயிருப்பேன் (எபே 2:19)

### II. எச்சரிப்பு : இரண்டு (3:7-19)

அ. இஸ்ரவேல் ஜனங்கள் நமக்கு இன்று உதாரணமாயிருக்கிறார்கள்.

1. **தேவனை கோபமூட்டினார்கள்** ( 1கொரி 10:5; சங் 78:17,40; யாத் 32:7-10), அதை போல நாம் இருக்க கூடாது. இயேசுவை விசுவாசிக்காதவன் மீது தேவ கோபம் தங்கும் (யோவா 3:36)

2. **இருதயத்தை கடினப்படுத்தினார்கள்.** அதைப் போல நாமும் செய்ய கூடாது (வ 8; எரே 9:14). தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதையும், அவருடைய விருப்பத்தை ஏற்றுக்கொள்வதையும் மறுக்கும் போது அவர் தனது இருதயத்தை கடினப்படுத்துகிறார்.பாவம் மிகப் பெரிய காரணம் (வ 13)
3. **தேவனைப்பரீட்சை பார்த்தார்கள்** (வ 9; 1 கொரி 10:9; சங் 78:18; அப் 5:9; யாத் 17:1-7). நாமும் இப்படி செய்யக்கூடாது. நாம் தைரியமாய் பொய் சொல்லும் போது கீழ்படியாமல் இருக்கும் போது நாம் தேவனை பரீட்சை (சோதித்து) பார்க்கிறம். இதனால் நாற்பது வருஷகாலம் சுற்றி திரிந்தார்கள் (எண் 14:33). தேவனுடைய பொறுமையை சோதிப்பது நல்லதா?
4. **வழுவிப்போகிற இருதயமுள்ளவர்கள்** (வ 10) – இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை விட்டு வழுவி விலகிப்போகிறவர்களாக இருந்தார்கள் (ஏசா 1:4,5; அப் 7:30)
5. **தேவனுடைய வழிகள் அறியாதவர்களாயிருந்தார்** (வ 10) – தாவீதை குறித்து அவன் என்னுடைய இருதயத்திற்கு ஏற்றவன்; எனக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்பவன் என தேவன் சாட்சி கொடுத்திருக்கிறார் (அப் 13:22).தேவன் அவருடைய பிள்ளை அவருடைய வழியில் நடக்கு வேண்டும் என எதிர்பார்க்கிறார் (சங் 32:8; ஏசா 48:17,18). இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய வழியை அறியாதவர்களாய் இருந்தார்பற் (ஏசா 1:3). நாம் வசனத்தின் படி நடக்கும் போது கிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து நம்முடையபாவங்களை கழுவுகிறது ( 1யோவா 1:7-9)

ஆ. இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்து நமக்கான எச்சரிப்பு என்ன? (வ 3:12-14)

1. தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் நமக்குள் இருக்க கூடாது (வ 12; 1 இரா 8:61)
2. பாவத்தின் வஞ்சனையில் கடினப்பட்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (வ 13)
3. ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கை முடிவு பரியந்தம் பற்றிக்கொண்டிருக்க வேண்டும் (வ 14)
4. கருத்து: புத்தி சொல்லுதல் என்பத் பின் வாங்கிப் போவதைத் தடுப்பதற்கான வழிகளில் ஒன்றாக இருக்கிறது (வ 13)
5. ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் கொண்டிருந்தால் நாம் கிறிஸ்துவினிடத்தில் எப்படிப்பட்டவர்களாயிருப்போம்?
    a. பங்குள்ளவர்களாயிருப்போம் ( 1கொரி15:19; மாற் 8:38)
    b. புத்தியுள்ள 5 கன்னிகள் ஆயத்தமாயிருந்தாதற்கு என்ன காரணம்? (மத் 25:7)
    c. மேலும் (வெளி 2:25,26)

இ. இஸ்ரவேல் ஜனங்களிடமிருந்த எந்த காரியம் தேவனை கோபப்படுத்தியது? அதினால் என்ன தண்டனை அவர்களுக்கு கிடைந்தது? (வ 11,15-19)

1. அவர்களின் இருதய கடினம் (வ 15; வ 8)
    a. தேவன் எப்படிப்பட்ட இருதயத்தை விரும்புகிறார்? (சங் 51:16,17; எசே 36:26,27)
    b. சவுலை தள்ளி, தாவீதை தேவன் தன்னுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக காண காரணம் என்ன? (அப் 13:21,22)
    c. சவுலிடம் இருந்த தவறு என்ன? ( 1சாமு 15:15-26), தன்னுடைய பாவத்தை நியப்படுத்துபவர்கள் தேவனுக்கு வேண்டுமா?
2. **“அவிசுவாசத்தினாலே” (வ 19)**
    a. தேவனை விட்டு விலகுவது (வ 12)
    b. பார்க்கவும் (எண் 14:1-29)
3. கீழ்ப்படியாமை (வ 18)
4. இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை என தேவன் ஆனையிட்டார் (வ 11; எண் 14:23)
5. வனாந்திரத்திலே அழிக்கப்பட்டார்கள் (வ 17; 1 கொரி 10:5; எண் 14:29)

ஈ. ஆனாலும் தேவனை உறுதியாய் பற்றிக்கொண்ட இரண்டு நபர்கள் யாரெல்லாம்? (எண் 14:6-9; 24). காலேப், யோசுவா. அவர்கள் தேசத்திற்குள் பிரவேசித்தார்கள்.

வீ.பா: இஸ்ரவேல் ஜனங்கள் செய்த தவறுகளை பட்டியலிடவும் (எபி 3:7-19). அதிலிருந்து நாம் கற்று கொள்ளும் முக்கியமான பாடங்களை குறிப்பிடவும்?

## அதிகாரம் 4

## எபிரெயர் 4:1-16

### I. பயந்திருக்கக்கடவோம் (4:1-10) :

அ. நாம் ஏன் பயந்திருக்க வேண்டும்? (வ 1)

1. இளைப்பாறுதலில் பிரவேசிக்கும் வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்கிறது (யோவா 14:1-3; 1 யோவா 2:25)
2. "அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்கு"
    a. இஸ்ரவேல் ஜனங்களைப் போல (3:15-19)
    b. பயமானது, பின்வாங்கிப் போகாமலிருக்க நமக்கு உதவும் (உபா 8:10-20; பிலி 2:12)

ஆ. விசுவாசிக்கிறவர்களாயிருப்போம் (வ 2-3)

1. இஸ்ரவேல் ஜனங்கள் அவிசுவாசத்தினால் தேவனை கோபமூட்டி அழிக்கப்பட்டனர். (3:19; 1 கொரி 10:5)
    a. யூதர்களுக்கு அறிவிக்கப்பட்டது போலவே நமக்கும் சத்தியம் பிரசங்கிக்கப்பட்டது (வ 2; அப் 7:38)
    b. கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டார்கள் (வ 2); அவர்கள் இருதயம் கடினப்பட்டிருந்தது (3:8) ,ஆகவே கேட்ட வசனம் அவர்களுக்கு பிரயோஜனப்படவில்லை. தேவனுடைய வார்த்தைகள் நம்முடைய பிரயோஜனத்திற்காகவே தேவன் கொடுத்திருக்கிறார் (2 தீமோ 3:16,17; ஏசா 48:17)
    c. அவிசுவாசமே தடையாகவும், பிரட்சனையாகவும் இருக்கிறது ( மத் 13:58; ரோம 11:20,23). பின்வாங்கிப்போவதைத் தடுப்பதற்கு நாம் தேவனுடைய வார்த்தைக்கு பயப்படுவது வேண்டும் (ஏசா 66:2)
2. விசுவாசிக்கிறவர்களுக்கு என்ன நன்மை? (வ 3)
    a. இளைப்பாறுதலின் பிரவேசிக்கிறோம் (வ 3)
        1. சத்தியத்தைத் தெரிந்திருப்பது மட்டும் போதாது, நாம் சத்தியத்தை எடுத்துக்கொண்டு, அதை நம்முடையதாக்கிக் கொண்டு, தேவனை விசுவாசித்து, சத்தியத்தை நம் சொந்த வாழ்வில் பிரயோஜனப் படுத்த வேண்டும் (கீழ்ப்படிய வேண்டும்) (யாக் 1:22-25)

இ. தேவன் ஓய்ந்திருந்தார், இளைப்பாறினார் (வ 4-10 = ஆதி 2:1-3)

a. வச 4-யில் எபிரெய ஆசிரியர், ஏழாம் நாளில் உண்டான தேவனுடைய இளைப்பாறுதலுக்கும், தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களின் வாழ்வின் முடிவிலே அவர்களுக்கு உண்டான இளைப்பாறுதலுக்கும் ஒரு ஒப்பீட்டை எழுதத் தொடங்குகிறார்.

   2. தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் . தேவன் சோர்வாக இருந்தார் மற்றும் அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது என்று இது அர்த்தப்படுத்தாது (ஏசா 40:28-31). இது தேவன் இப்பொழுது ஒன்றுமே செய்யவில்லை என்பதை குறிக்காது, தேவன் தொடர்ந்து கிரியைகளை செய்து கொண்டு இருக்கிறார் (சங் 115:3; யோவா 5:17)

   3. தேவன் தம்முடைய படைப்பை முடித்துவிட்டபடியால் அவருடைய இளைப்பாறுதல் இறுதியானதாக இருந்தது; ஒரு மனிதன் இந்த வாழ்க்கையிலிருந்து அடுத்த வாழ்க்கைக்குக் கடந்து போகும்போது அவனுடைய கிரியைகள் முடிந்து போகின்றன. கிறிஸ்தவரின் உலக வாழ்க்கை முடியும் போது, அந்த வாழ்க்கையில் அவருடைய கிரியைகள் முடிந்து போகிறது(கவலை ,வேதனை, பாரங்கள்) அவர் இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறார் (வச 10; வெளி 14:12; வெளி 21:4)

b. தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? (வ 5- 7 = சங் 95:10,11)

   1. இஸ்ரவேல் ஜனங்கள் கீழ்படியாதது போல நானும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் இருக்க கூடாது (வ 6)
   2. அவருடைய சத்தத்திற்கு இருதயத்தை கடினப்படுத்தாதிருக்க வேண்டும் (வ 7)

c. யோசுவாவை விட இயேசு மேலானவர் (வ 8-10)

   1. இளைப்பாறுதல் என்ற வார்த்தை இரட்டை அர்த்தத்தை நோக்கமாகக் இருக்கிறது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசம் ஒருவிதமான இளைப்பாறுதலாக இருந்தது. ஆயினும் இறுதியான இளைப்பாறுதல் நித்தியமானது மட்டுமே. இப்படியாக, யோசுவா அவர்களை நித்தய இளைப்பாறுதலுக்குள் கொண்டுவர வில்லை, கானன் தேசம் மாம்சப்பிரகாரமானது (யோசு 1:15)

2. ஆனால் இயேசு நித்தயமான இளைப்பாறுதலை நாம் அடைவதற்கு வழியாக இருக்கிறார். (யோவா 14:6; எபி 10,19,20)

பயிற்சி: விடுமுறை நாள்களில் நீங்கள் எதற்கு ஓய்திருப்பீர்கள்; எப்படியெல்லாம் இளைப்பாறுவீர்கள்?

**II. ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம் (4:11-13)**

அ. "கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு" (வ 11)-

1. இஸ்ரவேல் ஜனங்கள் நமக்கு திருஷ்டாந்தம் (வ 11; 1 கொரி 10:11)
2. கீழ்ப்படியாமை என்பது மோசமான பாவமாயிருக்கிறது (2 தெச 1:7,8; 1 சாமு 15:22,23). தேவனுடைய வார்த்தைகள் அறிந்தும் கீழ்படியாமல் இருப்பது எவ்வளவு மோசமானது (லூக் 12:47)

ஆ. "தேவனுடைய வார்த்தை எப்படிபட்டது (வ 12)?

1. "ஜீவனும்" – ரோம 8:2; யோவா 6:63
2. "வல்லமையுள்ளது"- ஏசா 55:10,11; ஏரே 23:29;
3. "இருபுறமுப் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்" – எபே 6:17
4. "பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிற" – அப் 2:37
5. "நினைவுகளையும், யோசனைகளையும், வகையறுக்கிறதாயும்" – (2தீமோ 3:16,17; ஏசா48:17,18)

**கருத்து:** தேவனுடைய வார்த்தையானது வல்லமையுள்ளது என்பது என்னை பலப்படுத்தவும், சீர்ப்படுத்தவும், பாதுகாக்கவும் தேவனுடைய வார்த்தையினால் முடியும் என்பதை காண்பிக்கிறது, என்னுடைய பலவீன நேரங்களில் என்னை பலப்படுத்த நான் தேவனுடைய வார்த்தைக்கே நான் ஓடி வர வேண்டும் (2 கொரி 10:4-5). தேவனுடைய வசனம் பிரிக்கிற ஒன்றாக இருக்கிறது. அது நல்லதிலிருந்து கெட்டதையும், தேவையானதிலிருந்து தேவையில்லாததையும் பிரிக்கிறது. வேதாகமமானது சுய பரிசோதனை செய்யும் படி நம்மை வலியுறுத்துகிறது

இ. "அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (வ 13) –

1. தேவன் நம்மைக் குறித்து எல்லாவற்றையும் அறிவார் ( சங் 139:1-8)
2. அவருடைய கண்களுக்கு முன்பாக நான் எதையும் மறைக்க முடியாது (நீதி 5:21; எரே 17:10)

3. இயேசுவின் கண்கள் அக்கினிஜுவாலை (வெளி 1:14; லூக் 7:39,40)

**III. தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் (4: 14-16):**

அ. நமக்காக இருப்பவர் எப்படிப்பட்டவர்? (வ 14-15)

1. தேவகுமாரனாகிய இயேசு (வ 14)
2. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன மகா பிரதான ஆசாரியர் (இயேசு) – ( வ 14; 3:1)
3. இயேசு நமக்காக பரிதபிக்க கூடியவராக இருக்கிறார்(வ 15; மத் 15:32)
    a. "பரிதபிக்க என்றால் மற்றவருடைய உணர்வுகளைத் தானும் உணர்ந்து பாதிப்படைதல் என்று பொருளாகும்.
    b. அவர் மனதுருக கூடியவர் (சங் 111:4)
        i. குஷ்டரோகியிடம் (மாற் 1:40-41)
        ii. நாயீன் ஊர் விதவையிடம் (லூக் 7:12-15)
        iii. ஜனங்களின் மீது (மத் 9:36; மத் 14:14)
4. நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர் (வ 15; 2:18; மத் 4:1-10)
    a. "சோதிக்கப்பட்டு" – பரீட்சிக்கப்படுதல், சோதித்தல் (ஏசா 28:16)
    b. மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும்
    c. "பாவமில்லாதவர்" – அவர் சோதனையில் தன்னை நிருபித்திருக்கிறார் (1 பேது 1:19)

ஆ. நாம் செய்ய வேண்டியது என்ன? (வ 4:14-16)

1. நாம் பண்ணிண அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம் (வ 14).
    a. நாம் பண்ணிண அறிக்கை என்ன?
        i. அப்போஸ்தலர் 8:37 யை பார்க்கவும்
        ii. இயேசு பொந்தியு பிலாத்துவினிடத்தில் தன்னை கிறிஸ்து என அறிக்கை செய்தார் (அப் 27:11; 1 தீமோ 6:14)
        iii. அப்போஸ்தலர்கள் அறிக்கை செய்தனர் (அப் 2:36; அப் 9:21; மத் 16:16)
        iv. நாமும் இயேசுவை கிறிஸ்து என்றும், தேவனுடைய குமாரனென்றும், அறிக்கை செய்திருக்கிறோம், கிறிஸ்து நமக்காக இருக்கிறார் ஆகவே அந்த அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டும். மறுதலிக்க கூடாது

b. தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (வ 16)

   i. கிருபாசனம் ( throne of grace ) – பழைய ஏற்பாட்டில் ஆசாரியத்துவத்தில் மகா பரிசுத்த ஸ்தாலத்தில் உடன்படிக்கை பெட்டியின் மேல் இது வைக்கப்பட்டிருந்தது. கிருபாசனத்தின் மேலுள்ள இரண்டு கேருபீன்களின் நடுவில் இருந்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடன் தொடர்பு கொண்டார். (யாத் 25:21,22). இந்த கிருபாசனத்திற்கு முன்பு வருவதற்கு சில எச்சரிப்புகளை கொடுத்திருந்தார், பிரதான ஆசாரியர்கள் சாகாதபடிக்கு இதை செய்ய வேண்டியதாக இருந்தது (லேவி 16:11-14)

   ii. இன்று நாம் இரக்கத்தை பெறவும் –

      1. நமக்கு இரக்கம் தேவைப்படுகிறதா? எதில்?

         a. நம்முடைய மிகப்பெரிய பிரட்சனையாக இருப்பது பாவம், நாம் பாவத்தோடு தினமும் போராடிக்கொண்டிருக்கிறோம். நாம் பாவம் செய்கிறோம் என்பது உண்மையே ( 1 யோவா 1:8; யாக் 3:1)

         b. நாம் நமது பாவங்களை ஒளித்து வைக்க முடியாது, தேவன் எல்லாவற்றையும் அறிவார் (வ 13). இப்பொழுது நாம் என்ன செய்வது? அவற்றை ஒப்புக்கொண்டு இரக்கத்திற்காக இயேசுவினிடம் திரும்ப வேண்டும்.

            i. உதாரணம் : பேதுரு (லூக் 22:61,62 ; லூக் 24:12)

            ii. உதாரணம்: பாவியான ஸ்திரீ (லூக் 7:37-44)

            iii. பாவமன்னிப்பிற்காக பிதாவிடம் ஜெபம் பண்ணுங்கள், இயேசு நாமத்தினால் (லூக் 11:4; யோவா 16:23-26; 1 யோவா 2:1,2)

            iv. நாம் தொடர்ந்து இயேசுவின் வசனத்தின் ஒளியில் நடக்கும் போது இயேசுவின் இரத்தம் தொடர்ந்து நம்முடைய பாவங்களை கழுவுகிறது (1 யோவா 1:7). அவருக்குள் இருப்பதன் மூலம் பாவமன்னிப்பு நமக்கு கிடைக்கிறது (எபே 1:7; யோவா 6:56)

iii. “கிருபையை அடைய”-

1. நமக்கு உதவி வேண்டும். ஏற்ற சமயத்தில் தேவன் நமக்கு உதவி செய்யவார் (1 பேது 5:6)
2. நம்முடைய உதவிக்காக தைரியமாய் தேவனிடத்தில் கேட்க வேண்டும். (யாக் 5:16)
3. உங்களுக்கு உதவி தேவைப்படும் போது நீங்கள் யாரிடம் போய் கேட்பீர்கள்? (ஏசாயா 31:1)
    a. எசேக்கியா ( 2 இராஜா 20:1-8)
    b. இளைய குமாரன் (லூாக் 15:21)

iv. நம்முடைய கிருபாசனம் எங்கே இருக்கிறது?

1. நம்முடைய மகா பரிசுத்த ஸ்தலம் எங்கே இருக்கிறதோ அங்கே (எபி 6:19,20; எபி 10:19)

வீ. பா : பழைய ஏற்பாட்டின் பிரதான ஆசாரியரின் வேளை என்னென்ன? இன்று இயேசு பிரதான ஆசாரியராய் இருப்பது நமக்கு எந்த விதத்தில் நடைமுறையில் உதவுகிறது (உதாரணம்)?

# அதிகாரம் 5

எபிரெயர் 5:1-14

**I. நமது பிரதான ஆசாரியர் மகா பெரியவர் (5:1-10)**

அ. மனுஷரில் தெரிந்துகொள்ளப்பட்ட பிரதான ஆசாரியன் (5:1-4):

1. ஆசாரியர்களுக்கான தகுதி (வ 4)
   a. ஆரோனின் வம்சத்திலிருந்தே பிரதான ஆசாரியர்களும், ஆசாரியர்களும் வந்தனர் (வ 4; யாத் 28:1,2).
   b. லேவி கோத்திரத்தில் பிறந்த மோசேயின் சகோதரரான ஆரோன் என்பவர் முதல் பிரதான ஆசாரியராக இருந்தார்.
   c. ஆசாரியர்கள் என்பது தேவனுடைய தெய்வீக நியமனத்தின் படி இருக்க வேண்டும்
2. ஆசாரியர்களின் வேலை (வ 1-3)
   a. பாவங்களுக்காகக் காணிக்கைகளையும், பலிகளையும் செலுத்த வேண்டும் (வ 1; எண் 15:22-29; லேவி 16:11-19)
   b. மனுசருக்காகத் தேவகாரியங்களைப் பற்றி நியமிக்கப்படுகிறான் (வ1)
      i. பிரதான ஆசாரியர் இஸ்ரவேல் மார்க்கத்தலைவராக இருந்தார். (உபா 17:8-12; 2 நாளா 26:16-20)
      ii. இயேசுவின் காலத்தில் (லூக் 22:54,66)
      iii. பிரதான ஆசாரியர் விசேஷித்த கடமைகளையும் கொண்டிருந்தார். கோத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்ட மார்ப்பதக்கத்தை அவர் தரித்துக் கொண்ட போது, அவர் இஸ்ரவேல் மக்களுக்கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்தார் (யாத் 28:29,30)
   c. **“தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே” (வ 2)**
      **i.** ஆசாரியர்கள் எதில் பலவீனமுள்ளவர்களாயிருந்தனர்? “பாவம்” வேவியத்துவ ஆசாரியர்கஙள் தாங்களும் பாவிகளாயிருந்ததோடு (லேவி 9:7; எபி 9:7); தங்களுடைய சொந்தப் பாவங்களுக்காகப் பலி செலுத்த வேண்டியிருந்தது (லேவி 4:3; வ 3)
   d. **“இரங்கத்தக்கவனாயிருக்கிறான்” (வ 2)**
      **i.** யாருக்கு?
         **1. “அறியாதவர்களுக்கு”** – எண் 15:25
         **2. “நெறி தப்பிப்போனவர்களுக்கும்”** – வழி விலகினவர்கள்

3. அவனுடைய பாவத்தை தேவன் இரக்கமுடையவராய் மன்னிக்கிறது போல அவனும் இரக்கமுடையவனாய் இருக்க வேண்டும்.

ii. ஆனால் ஆசாரியர்கள் அப்படி இருந்தார்களா?

1. உண்மையில்லாதவர்களாய் (மல் 1:8; 1 சாமு 2:12-17)
2. இரக்கமில்லாதவர்கள் (லூக் 10:30-32)

**II. கிறிஸ்து என்னும் பிரதான ஆசாரியர் (5:5-10)**

**அ.** எப்படி இயேசு நமக்கு பிரதான ஆசாரியராய் இருக்கிறார்? (வ 5-10)

1. **தம்மை தாமே உயர்ந்த வில்லை (வ 5)**
   a. தன்னைத்தானே நம்முடைய பிரதான ஆசாரியரென அழைத்துக்கொள்ள வில்லை, அதாவது தம்மை தாமே நியமித்துக்கொள்ளவில்லை.
   b. உசியாவைப்போல இல்லை (2 நாள 26:16-20)
   c. கோராகு போல இல்லை (எண் 16:8-11)
2. **தேவனே நியமித்தார் ( வ 5,10,1)**
   a. இயேசு கிறிஸ்துவிற்கு, பிரதான ஆசாரியருக்கான தகுதி தேவனால் கொடுக்கபட்டது. (சகா 6:13)
3. **மெல்கிசேதேக்கின் முறைமையின் படி (வ 6; 10 = சங் 110:6; ஆதி 14:18)**
4. **மனிதர்களிடையேயான அவரது வாழ்க்கை அவரைச் பூரணப்படுத்தியது** (தகுதிப்படுத்தியது மற்றும் நிறைவாக்கியது) (வ 7-9; எபி 2:17; எபி 4:14; எபி 5:1)
   a. இயேசு மாம்சத்திலிருந்த நாட்களில் என்ன செய்தார்? (வ 7 = லூக் 22:41-46)
      i. பிதாவை நோக்கி
      ii. "பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி"
      iii. "வேண்டுதல் செய்து"-
         1. இது முற்றிலும் இன்னொருவருடைய இரக்கத்தைச் சார்ந்து இருக்கிறோம் என்பதை ஒருவர் புரிந்துக்கொள்ளும்போது செய்யக்கூடிய மிகவும் தாழ்மையான ஜெபம். இயேசு பிதாவை முற்றிலும் சார்ந்தவராக இருந்தார்.
      iv. "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு"
         1. பயபக்தி = அச்சம், பதற்றம் மற்றும் கலக்கம்

2. நம்முடைய உணர்வுகள் போலவே அவரும் உணர்ந்தார். அவருடைய பதற்றம் மற்றும் கலக்கம் ஆகியவை எந்தவொரு மனிதனுக்கும் வருவதைப் போன்றதாகவே இருந்தது.

v. பட்ட பாடுகளினால் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு

b. இயேசு ஒரு மனிதர் என்ற வகையில் பாடுகளைக் கடந்து சென்றார். அவர் "மாம்சத்தில் இருந்த நாட்களில் அவரது பாடுகள் நடந்தேறின(வ 7). இந்த விசேஷித்த தகுதியானது. இயேசுவை நமது பிரதான ஆசாரியராக இருக்கக் கூடியவராக்குகிறது. (எபி 5:2 = எபி 4:15; எபி 2:17, 18)

c. **"காரணராகி" (வ 9) –** இயேசு எதினால் பூரணரானர் ? (வ 9) பட்டபாடுகள் (2:10); இயேசு எல்லாருக்காகவும் மரித்திருக்கிறார்(2:9) என்றாலும் அவருக்கு கீழ்ப்படிகிறவர்களே நித்திய இரட்சிப்பை அடைகிறார்கள் (வ 9)

## III. ஆவிக்குரிய வளர்ச்சியின் அவசியம் (5:11- 14)

1. எபிரெய கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் எப்படிப்பட்டவர்களாய் இருந்தார்கள் என எபிரெய ஆசாரியர் கூறுகிறார்? (வ 11-14)

a. **"கேள்வியில் மந்தமுள்ளவர்கள்" (வ 11) –** "மந்தம்" = dull "மெதுவான, சுறுசுறுப்பற்ற மற்றும் சோம்பேறியான

i. இவர்கள் சோம்பறித்தனமாகக் கற்றுக்கொள்பவர்களாக இருந்தனர்; கற்றுக்கொள்வதற்குத் தேவையான முயற்சி மேற்கொள்ள விரும்ப வில்லை

ii. பார்க்கவும் - மத் 13:13; யோவா 8:43; லூக் 24:25

**b. "விளங்கப்பண்ணுகிறது அரிதாயிருக்கும்" (வ 13)**

i. ஆசிரியர் கூறுவதை இவர்கள் புரிந்துகொள்ளும் திறன் உடையவர்களாக இல்லை

ii. இதற்கு காரணம் இவர்கள் ஆவிக்குரிய ரீதியில் குழந்தையாயிருக்கிறார்கள். (வ 12,13) ஆவிக்குரிய ரீதியல் வளர்ச்சி மிகவும் தேவைப்படுகிறது.

iii. நமது பிரதான ஆசாரியாராக இயேசு, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்திலிருந்து அவர் செய்யும் ஆளுகையை (எபே 1:20) எளிதில் புரிந்துகொள்ள முடியாதவைகள். இயேசுவின் ஆசாரியத்துவம் பாலைப் போன்ற

எளிதான ஆகாரமல்ல, மாறாக இறைச்சியைப் போன்றது (எபி 5:12)

1. குழந்தைகளுக்கு தாய் இறைச்சி எப்படி சாப்பிட கொடுப்பார்கள். தான் மின்று அதை கொடுப்பார்கள் அல்லவா!

c. **“மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்க வேண்டியதாயிருந்தது”** (வ 12)- (குழந்தைகளாக இருக்கும் புருஷர்கள்)

   i. காலத்தை பார்க்கும் போது வளர வேண்டியவர்கள் இன்னும் வளராமல் இருப்பது என்பது உண்மையில் பிரட்சனையாக இருக்கிறது. காலத்துடன் வளர வேண்டிய குழந்தைகள் வளராதல் இருப்பதை நாம் என்ன கூறுவோம். வளர்ந்துவிட்ட ஒருவர் புட்டிப்பால் (அ) தாய்ப்பால் விரும்புவதைக் போன்ற பரிதாபமான தோற்றத்தை இங்கே ஆசிரியர் உருவாக்குகிறார். (
   ii. பார்க்கவும் – 2 தீமோ 3:7;
   iii. நாம் கிறிஸ்துவுக்குள் வளர வேண்டும், அதற்கு நாம் சத்தியத்தை பயன்படுத்த வேண்டும். (எபே 4:13,14; 1 பேது 2:3)
   iv. சரீரத்தில் வளருவதை விட ஆவிக்குரிய ரீதியில் இயேசுவை அறிகிற அறிவில் வளரவேண்டும்; இன்று இயேசு நமக்கு எப்படி உதவி செய்கிறார் என்பதிலும். அவருடைய வல்லமை அறிகிறதில் வளரவேண்டும். ( 2பேது 3:18; பிலி 3:8)

d. ***“நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவர்களாயிருந்தார்கள்” (வ 12) –***

   i. ஒரு போர்வீரன் தன்னுடைய ஆயுதத்தில் பழக்கமில்லாதவனாயிருந்தால் என்ன ஆபத்துங்கள் வரும் என்பதை சிந்தித்து பாருங்கள்? அதை போல கிறிஸதவன் தன்னுடைய ஆயுதமான வசனத்தின் மீது பழக்கமில்லாதவனானால் எவ்வளவு பிரட்சனைகள் வரும்
   ii. பெரோயா பட்டணத்தாரையும் தெசலோனிக்கேயா பட்டணத்தாரையும் ஒப்பிட்டு பார்க்கும் போது நமக்கு என்ன புரிய வருகிறது ( அப் 17:11)
   iii. தேவனுடைய வார்த்தையில் நமக்கு பயிற்சியும், முயற்சியும் வேண்டும் (வ 14), அதை கொண்டு (நீதியின் வசனம்) நல்லது மற்றும் கெட்டதை நாம் பிரித்துபார்த்து நல்லதை செய்ய வேண்டும். இப்படி செய்வதால் ஞானேந்திரியங்களையுடைய பூரண வயதுள்ளவர்களாக மாறுவோம். தேவனுடைய வார்த்தையை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்தவும், அதை மற்றவர்களுக்கு போதிக்க தக்க வளர வேண்டும்.

# அதிகாரம் 6

எபிரெயர் 6:1-20

**I. வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் (6:1-3)**

அ. தேவனுடைய சித்தத்தின்படி என்ன செய்ய வேண்டும் ? (வ 3)

1. "பூரணராகும் படி கடந்து போவோமாக" ( வ 2) – இந்த அதிகாரம் தொடங்கும் போதே "ஆகையால்" என ஆசிரியர் தொடங்குவதால், போன அதிகாரத்தின் தொடர்ச்சியாகவே இது இருக்கிறது. ஒரு கிறிஸ்தவர் இரட்சிக்கப்பட்ட போது இருந்தது போலவே கடைசி வரை இருந்து விட கூடாது, அவர் ஆவிக்குரிய வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சியில் அவரது இலக்கானது , அவர் இயேசு போல பூரணர் ஆக தொடர்ந்து வளர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும் (கொலே 3:10). நாம் வளர்ச்சி அடையவதற்கான தேவையான எல்லாவற்றையும் தேவன் அவருடைய வல்லமையுள்ள வசனத்தினால் நமக்கு கொடுத்திருக்கிறார். ( 1 பேதுரு 2:3; 2 பேது 1:3,4). வளர்ச்சியில் குறை என்பதே நம்மை பின் வாங்கி போக செய்கிறது. தேவனுடைய பிள்ளைகள் வளர்ச்சி அடையாத குழந்தைகளாய் இருக்க வேண்டும் என தேவன் விரும்பாமல், அவர்கள் கிறிஸ்துவை போல பூரண புருஷராக வேண்டும் என தேவன் விரும்புகிறார் (ரோம 8:29; எபே 4:15,16; 1 யோவா 2:6). கிறிஸ்துவுக்குள் நான் வளர்வது, வளராதது என்னுடைய விருப்பமில்லை. அது கட்டளையாகவும், மிகவும் அவசியமானதாக இருக்கிறது. (மத் 5:48)
2. "அஸ்திபாரத்தை மறுபடியும் போடாமல்" (வ 2) – பூரணர் ஆக நாம் கடந்து செல்ல வேண்டும், ஒரு கட்டிடம் கட்டிக்கொண்டிருக்கும் போது, ஒருவர் இன்னொரு அஸ்திபாரத்தை போடப்போனால் அது அந்த கட்டிடத்தை அழித்துப் போடும். அதை போல அடிப்படைய மூல உபதேச வசனங்களை மறுபடியும் போடாமல் (வ 1), அவற்றின் மீது நாம், வேதாகம அறிவின் சுவர்களைக் கட்டி எழுப்ப வேண்டும்.
3. " மூல உபதேசங்கள் " (வ 1,2) –
    a. "மனந்திரும்புதல்"-
        i. செத்த கிரியைகளுக்கு அதாவது நம்முடைய முந்தின பாவ வாழ்க்கையில் செய்த கிரியைகள், மனந்திரும்புதல் செத்த கிரியைகளிலிருந்து நீங்க செய்கிறது (கொலே 3:9,10), பழைய மனிதன் செத்தவன், அவனை அடக்கம் செய்தோம் , ஞானஸ்நானத்தில் (ரோம 6:4-7)

b. “விசுவாசம்” – எபி 11:6; நம்முடைய விசுவாசம் தொடர்ந்து வளர வேண்டும்.

c. “ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்” – இந்த வார்த்தை பன்மையில் இருக்கிறது.

   i. புதிய ஏற்பாட்டின் அடிப்படையில் வித்தியாசப்பட்ட ஞானஸ்நானங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

      1. பரிசுத்த ஆவி ஞானஸ்நானம் (மத் 3:11) – அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்ததத்தம் செய்யப்பட்டு, கொடுக்கப்பட்டது (அப் 2:1-4; அப் 1:4-8)
      2. அக்கின் ஞானஸ்நானம் (மத் 3:11) – பாவிகள் மீது வரும் தண்டனை குறிக்கிறது. (வெளி 20:14,15)
      3. யோவான் கொடுத்த ஞானஸ்நானம் (அப் 19:3) – யோவானின் மரணத்தோடு நின்று விட்டது.
      4. பிரதான கட்டளையில் கட்டளையிடப்பட்ட ஞானஸ்நானம் (மத் 28:18-20) – இரட்சிக்கப்பட எல்லாருக்குமானது (மனிதர்கள்)

d. “கைகளை வைக்குதல்” – பரிசுத்த ஆவியின் வரத்தை குறிக்கிறது (அப் 6:6; 8:17; 19:5-6). புதிய ஏற்பாடு முழுமையாக கொடுக்கப்படுவதற்கு முன்பு இருந்தது , புதிய ஏற்பாடு முழுமையாக வந்த பின்பு கடந்து போய்விட்டது (1 கொரி 13:11)

e. “மரித்தோரின் உயிர்தெழுதல்” - 1 கொரி 15:12-23

f. “நித்திய நியாயத்தீர்ப்பு” – எபி 9:27

g. எபிரெயர்கள் தாங்கள் கற்றுகொண்ட இந்த மூல உபதேசங்களை குறித்து மீண்டும் போதிக்கபட வேண்டியவர்களாக இருந்தார்கள் ( எபி 5:12).

**கருத்து:** இந்த எபிரெயர்களிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம், நாம் தொடர்ந்து வளர வேண்டும் என்பதே நாம் ஆரம்பத்தில் இருந்தது போலவே கடைசிவரை இருக்க கூடாது. நான் ஆவிக்குரிய ரீதியில் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக இருக்க வேண்டும் (கொலே 1:28). இன்று நான் வேதாகம மாணவனாய் இருந்தால்; நாளை ஆசிரியராக மாற வேண்டும்.

## II. மூன்றாவது எச்சரிக்கை ( 6:4-9 )

அ. “மறுதலித்துப்போனவர்கள்” (வ 6) ; “துரோகம்” “விசுவாசத்தை விட்டு விலகுதல்”; இப்படி மறுதலித்துப்போனவர்கள் தேவனுடைய குமாரனாகிய இயேசுவை என்ன செய்கின்றனர் ( வ 6)

1. மறுபடியும் சிலுவையில் அறைந்து
2. அவமானப்படுத்துகிறார்கள்

ஆ. எப்படிப்பட்டவர்கள் மறுதலித்துப்போவது இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைவது போலவும், அவமானப்படுத்துவதாக இருக்கிறது? (வ 4-5)

1. “ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டு” (10:32) – பிலி 2:14; ஆவிக்குரிய குருட்டு நீக்கப்பட்டவர்கள் ( 2 கொரி 4:4,6); சத்தியத்தை புரிந்து கொண்டவர்கள் (சங் 19:8; எபே 1:19)
2. “பரம ஈவை ருசிபார்த்து” –“பரத்திலிருந்து வரும் ஈவு” – இயேசுவின் மூலம் கிடைத்த இரட்சிப்பு (யோவ 6:51-57) பரலோகத்தை குறித்த சந்தோஷம் (1 பேது 1:4-6)
3. “பரிசுத்த ஆவியைப் பெற்றும்” – சுவிசேஷத்திற்கு கீழ்படிந்து, ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்கின்றனர் (அப் 2:38; அப் 5:32)
4. “தேவனுடைய நல்வார்த்தைகளை ருசி பார்த்தவர்கள்” – தேவனுடைய வார்த்தையினால் பிழைத்தார்கள், பலனடைந்தவர்கள், சந்தோஷமடைத்தவர்கள், தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக்கொண்டவர்கள் (மத் 4:4; 1பேது 2:3; எரே 15:16)
5. “இனிவரும் உலகத்தின் பெலனை ருசிபார்த்தவர்கள்” – மேசியாவின் காலமாக இருக்கலாம் அல்லது பரலோகத்தை குறிப்பதாக இருக்கலாம்; பரலோகத்தை குறித்த சந்தோஷம் (1 பேது 1:4-6). அல்லது இந்த இரண்டையும் சேர்ந்தே கூறிப்பிட கூடியதாக இருக்கலாம்

இ. இரட்சிக்கப்பட்டவர் மற்றும் தேறின கிறிஸ்தவர்கள் விழுந்து போவதற்கு வாய்ப்பிருக்கிறதா? (வ 9) ஆம், இதினால் நாம் நம்முடைய இரட்சிப்பை குறித்து கவலைப்பட வேண்டும் (2:4); மற்றும் பயப்பட வேண்டும் (4:1)

ஈ. தேவனால் ஆசிர்வதிக்கப்படும் நிலமானது எப்படிப்பட்டது? தேவனால் சபிக்கப்படும் நிலம் எப்படிப்பட்டது? (வ 7,8)

1. பயிரை முளைபிக்கும் நிலம் ஆசிர்வதிக்கப்படும் ( வ 7) – தேவனுடைய வார்த்தையின் படியாக அவருடைய சித்ததை நிறைவேற்றுபவர்கள், ஆசிர்வதிக்கப்படுகிறார்கள். (யோவா 15:2; ஏசாயா 55:10,11)
2. முள்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைபிக்கிற நிலமோ சபிக்கப்பட்டது (வ 8) – தேவனுடைய வார்த்தையை பெற்றும், அவருடைய சித்ததை நிறைவேற்றாமல் பின்வாங்கி, முள் செடியை போன்ற கிரியை கொடுக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள். இதன் முடிவு சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு. (மத் 13:30; யோவா 15:2,6)

**III. அந்த நம்பிக்கை நமக்கு ஆத்தும நங்கூரம் (6:9-20)**

அ. எபிரெயர்களை குறித்து எபிரெய ஆசிரியரின் நம்பிக்கை என்னவாக இருந்தது? (வ 6 )

1. நன்மையானவைகள்
2. இரட்சிப்புக்குரிய காரியங்கள்

ஆ. இந்த எபிரெயர்களிடம் இருந்த நல்ல காரியங்கள் என்னென்ன? (வ 10; எபி 10:33,34)

1. அவர்களிடம் கிரியை இருந்தது – தேவனுடைய பற்றி அறிவு மாத்திரம் போதாது, அதன் உடன் கிரியை வேண்டும் ( யாக் 2:20)
2. பரிசுத்தவான்களுக்கு ஊழியம் செய்தனர்/ செய்து வருகின்றனர் – பார்க்கவும் எபி 10:34; இவர் தங்களுடைய பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்ந்தார்கள் (1 தீமோ 6:19).
3. தேவனுடைய நாமத்திற்காக அன்புள்ள பிரயாசத்தை காண்பித்தார்கள் – பரிசுத்தவான்களுக்கு செய்யும் பணிவிடைகள் அவருடைய நாமத்திற்காகச் செய்யப்பட்டவைகள் (மத் 25:40)

இ. எபிரெயர்கள் சொல்லப்பட்ட புத்திமாதிகள் என்னென்ன? (வ 6- 13)

1. “அசதியாயிராமல்” (வ 11) – இது ஜாக்கிரத்தையாயிருப்பதற்கு நேரெதிரானது, இதற்கு சோம்பேறயாக இருந்தல் மற்றும் மந்தமாயிருத்தல் என்று அர்த்தமாகும். (ரோம 12:11; 1 தீமோ 4:14; எரே 48:10); இவர்கள் தேவனுக்கு செய்த காரியங்களை விட்டு விடாத படிக்கு, அசதியை விட்டுவிட வேண்டியதாக இருந்தது.
2. தேவனிடமிருந்து ஆசிர்வாதங்களை பெற “விசுவாசமும்” “நீடிய பொறுமையும்” தேவை (வ 11) – உதாரணம் ஆபிரகாம் (6:13-15); இஸ்ரவேல் ஜனங்கள்

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்கு செல்ல விசுவாசமும், நீடிய பொறுமையும் தேவைப்பட்டடது (யாத் 14:12-16); அதை போலவே நாம் பரலோகத்தை சுதந்தரித்துக்கொள்ள விசுவாசமும், நீடிய பொறுமையும் நமக்கு வேண்டும் (ரோம 5:3; யாக் 1:4)

3. “நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாக” (வ 12) – ஏதோ சந்தேகத்தின் அடிப்படையில் இயேசுவை பார்க்காமல், இருமனம் நமக்கு இராமல் நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாக வேண்டும் (லூக் 14:30-32); நம்பிக்கையில்லாமல் தேவனை பின்பற்றுவது ஆபத்தானது, இஸ்ரவேல் ஜனங்கள் நமக்கான உதாரணம் ( 3:19; 4:2); என் ஓட்டத்தை தொடங்கிய நான் அதை முடிந்துவிட்டேன் என்பது போலவே
4. “முடிவுபரியத்தம் ஜாக்கிரதை காண்பிக்க வேண்டும்” (வ 12) – ஆரம்பத்தில் செய்ய நற்கிரியைகளை தொடர்ந்து முடிவு பரியந்தம் காண்பிக்க வேண்டும் என எபிரெயர்களுக்கு புத்தி கூறுகிறார். ( வ 10 )

ஈ. ஆபிரகாமின் பொறுமை நமக்கான முன்மாதிரியாக இருக்கிறது ( வ 13 – வ 17)

1. ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணினார் (வ 13) – ஆதி 15:1-6; ஆதி 22:16,17; தேவன் அதை தனது பேரில் ஆணையிட்டு, உறுதிப்படுத்தினார், நிச்சயப்படுத்தினார் (வ 15, 16)
2. ஆபிரகாம் தேவனின் வார்த்தையை நம்பி பொறுமையாய் காத்திருந்தான் ( வ 16; ரோம 4: 19,20 ) – வாக்குத்தத்தமான ஆசிர்வாதங்களை விசுவாசத்தினாலும், நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்கிறவர்களாகிய நமக்கு ஆபிரகாமை உதாரணமாக பயன்படுத்துகிறார். ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறை வேற நிறை ஆண்டுகள் தேவைப்பட்டதால், ஆபிரகாம் நம்பிக்கையின் பூரண நிச்சயத்தோடும், விசுவாசத்தோடும், மற்றும் நீடிய பொறுமையுடனும் இருக்க வேண்டியதாக இருந்தது. இது ஈசாக்கை பலியிட செல்வதில் நம்மால் பார்க்க முடிகிறது ஆதியாகமம் 22.
3. “அந்தபடி” (வ 17) – தேவன் ஆபிரகாமுக்கு ஆணையிட்டது போலவே நமக்கு ஓர் ஆணையிட்டு ஸ்திரப்படுத்தினார். ஆபிரகாமை போல நாமும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, நம்பிக்கையின் பூரண நிச்சயமுடையவர்களாக இருந்து (கிரியை) , நீடிய பொறுமையுடையவர்களாக இருக்க வேண்டும்

உ. நம்முடைய ஆத்தும நங்கூரம் (வ 18-20)

1. நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கை என்ன? (வ 18)
    a. ஆபிரகாம் தேவன் மீது நம்பிக்கை வைத்தான்(வ 13-16); அதாவது அவன் **"தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சியமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்"** என ரோமர் 4:21 ஆபிரகாம் தேவனுடைய ஆணையை நம்பி காத்திருத்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.
    b. அதைப்போல தேவன் நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார் (வ 11; எபி 4:1); அதை ஓர் ஆணையினாலே ஸ்திரப்படுத்தி; அதாவது தன்னுடைய குமாரனை நம்முடைய சொந்த பாவத்திற்காக கொடுத்து அதை உறுதிப்படுத்தியதால் (ரோம 8:32); தேவனுடைய மாறாத நிச்சயம் புலப்படுகிறது.
    c. தேவன் பொய்யுரையாதவர் என்பதும்(தீத்து 1:3);தேவனுடைய வாக்குத்தத்தம் , ஆணை மாறாதவைகள் என்பவைகள் (வ 17) நமக்கு ஆறுதலுண்டாக்க கூடியவைகளாய் இருப்பதோடு, இது நம்முடைய அடைக்கலம் (சங் 46:1) அவற்றின் மீது நாம் நம்பிக்கை கொண்டு இருக்கிறோம்.
2. அந்த நம்பிக்கை நமக்கு எப்படிப்பட்டதாயிருக்கிறது? (வ 19)
    a. நிலையும்
    b. உறுதியும்
    c. திரைக்குள்ளாகப் போகிற ஆத்தும நங்கூரம்
        i. நங்கூரம் என்பது நம்பிக்கையின் அடையாளமாக இருக்கிறது
        ii. நமது வாழ்வு இந்த பூமியின் அலைபாயும் காரியங்களில் அல்லாமல், பரலோகத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் (எபி 9:24;எபி 10:19) நங்கூரம் இடப்பட்டுள்ளது . அங்கே தான் நம்முடைய முன்னோடியாக ( வ 20) இருக்கிறார்.
        iii. கிறிஸ்துவே நமது நம்பிக்கையின் நங்கூரம் (கொலே 1:27; 1 தீமோ 1:1)
        iv. இயேசு நமக்கு முன்னோடியாக இருக்கிறார்(வ 20)
            1. பாரக்கவும் 1 பேது 2:21; 1 கொரி 11:1

**அதிகாரம் 7**

**எபிரெயர் 7:1-28**

**I.யார் இந்த மெல்கிசேதேக்கு? (7:1-3; ஆதி 14:18-20)**

அ. மெல்கிசேதேக்கு பற்றிய விவரம்: (வ 1-3)

1. சாலேமின் ராஜா (வ 1) – "சாலேம்" = "சமாதானம்" (வ 2)
2. உன்னதமான தேவனுடைய ஆசாரியன் (வ 1) –
    a. யாக்கோபு பிறப்பதற்கு முன்பே மெல்கிசேதேக்கு ஆசாரியனாய் இருந்தான். இவன் லேவி கோத்திரத்தான் இல்லை, ஆரோனின் வம்சமும் இல்லை.
3. ஆபிரகாமும், மெல்கிசேதேக்கும் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தனர் (வ 1,2 = ஆதி 14:19,20)
    a. ஆபிரகாமும், மெல்கிசேதேக்கு ஒரே தேவனையே தொழுதுக்கொண்டார்கள் (ஆதி 14:19,20)
    b. ஆபிரகாமை, மெல்கிசேதேக்கு ஆசிர்வதித்தான் (ஆதி 14:19,20)
    c. ஆபிரகாம், மெல்கிசேதேக்குக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் (வ2)
4. மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்று அர்த்தம் (வ2); சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்று அர்த்தம்
5. மெல்கிசேதேக்கு பற்றி நமக்கு தெரியாதவைகள் என்னென்ன? (வ 3)
    a. தகப்பனும், தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்
    b. இவன் நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் குறிப்பிடபடவில்லை.
    c. மெல்கிசேதேக்கு ஒரு தூதனாயிருக்கவில்லை (வ4), அவன் இயேசுவாகவுமிருக்கவில்லை (வ17) .
6. மெல்கிசேதேக்கும், தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்கும் இருக்கிற ஒற்றுமைகள் என்னென்ன? (வ 2-4,17)

| மெல்கிசேதேக்கு | கிறிஸ்து |
|---|---|
| இவனின் பெயருக்கு நீதியின் ராஜா என்று அர்த்தம் (வ 2) | கிறிஸ்து நீதியின் ராஜாவாக இருக்கிறார் (சக 9:9; ஏசா 11:4,5) |
| சாலேமின் ராஜா என்பதற்கு சமாதானத்தின் ராஜா என்று அர்த்தம் (வ2) | சமாதான பிரபு (ஏசா 9:6); சமாதான காரணர் (எபே 2:14) |
| ஆசாரியன்<br>லேவி கோத்திரத்திலிருந்து வரவில்லை (வ3) | ஆசாரியர்<br>லேவி கோத்திரத்திலிருந்து வரவில்லை (7:14) |

| | |
|---|---|
| தகப்பனும், தாயும் வம்ச வரலாறு இல்லாதவன் (3) | கிறிஸ்து உலக தோற்றத்திற்கு முன்பே இருக்கிறார் (மீகா 5:2; யோவா 17:24); இயேசு கிறிஸ்துவிற்கு தகப்பனும், தாயும் வம்ச வரலாறு தேவையில்லை. |
| இவன் நாட்களின் துவக்கம், ஜீவனின் முடிவுமில்லை (3) | இயேசுவை ஆதியும், அந்தமுமாயிருக்கிறார் (வெளி 1:8) |

## II. மெல்கிசேதேக்குவின் ஆசாரியத்துவம் (7:4-12)

அ. மெல்கிசேதேக்குவின் ஆசாரியத்துவம் எப்படி பெரியதாக இருந்தது? (வ4-12)

1. ஆபிரகாம் கொள்ளையிட்ட எல்லாவற்றிலும் இவனுக்குத் தசம பாகம் செலுத்தினான் (வ 4)
    a. " ஆபிரகாம் கோத்திர தலைவன்" – ஆபிரகாமின் சந்ததியிலிருந்தே எபிரெயர்கள் வந்தனர். அதாவது யூதர்களும், மற்ற கோத்திரங்களும் வந்தனர். ஆபிரகாமின் பிள்ளைகள் என்பதில் யூதர்கள் பெருமை கொண்டனர். ஆபிரகாமை பெரியவனாக பார்த்தனர் (மத் 3:9; யோவா 9:53), ஆனால் அந்த ஆபிரகாமே இவனுக்கு தசம்பாகம் கொடுத்திருக்கிறான் என்பது இவனுடைய ஆசாரியத்துவ மேன்மை காண்பிக்கிறது.
2. ஆபிரகாமின் அரையிலிருந்து லேவியர் வந்தார்கள் (வ 5).ஆகவே ஆபிரகாமின் கையிலிருந்து இவன் தசம பாகம் வாங்கின போது (வ 6) ஆபிரகாமின் அரையிலிருந்த லேவியனும் தசம பாகத்தை மெல்கிசேதேக்கு கொடுத்தான், (வ10). இதினால் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் பெரியதாக இருந்தது .
    a. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய ஊழியத்தை செய்து வந்த லேவியனுக்கு தசம்பாகம் கொடுக்க கட்டளை பெற்றிருந்தனர் (வ 5)
    b. தசமபாகம் வாங்குகிற லேவியர்கள் மெல்கிசேதேக்குக்கு கொடுத்தினால் இவர் ஆசாரியத்துவம் பெரியதாக இருக்கிறது (வ 7)
3. மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசிர்வதித்ததினால் பெரிய ஆசாரிய்த்துவத்தை பெற்றுயிருக்கிறார்கள் (வ6)
4. லேவிய ஆசாரியர்கள் மரிக்கிறவர்களாய் இருந்தனர் (வ 8). மெல்கிசேதேக்கின் மரணம் குறிப்பிடபடவில்லை. (வ 3)
5. லேவியர்களின் ஆசாரிய்த்துவம் மாறிப்போக கூடியதாக இருந்தது (வ 11-12)
    a. அந்த ஆசாரியத்துவம் பூரணப்படுத்தவில்லை (வ 11; வ 19) – லேவிய முறைமையின் படியான ஆசாரியர்களால் போதிக்கப்பட்ட பழைய

ஏற்பாட்டின் ஜனங்களின் பாவங்களுக்காக பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்தி வந்தாலும் அவைகளை பூரணமாய் போக்கவில்லை (கலா 3:11; ரோம 8:3)

b. ஆசாரியத்தும் மாற்றப்பட்டது (வ 12)

### III. இயேசுவின் மேன்மையான ஆசாரியத்துவம் (7:13-28)

அ. “இவைகள்” எல்லாம் யாரை குறித்து சொல்லப்பட்டிருக்கிறது? (வ 13)

1. கிறிஸ்துவை குறித்து
2. மெல்கிசேதேக்கை பற்றி பேசி இயேசுவின் பிரதான ஆசாரிய தன்மை பற்றி நமக்கு புரிய வைக்கிறார் எபிரெய ஆசிரியர்.

ஆ. மெல்கிசேதேக்கைப் போல ஆசாரியத்துவத்தை பெற்று இருக்கிறார் நம்முடைய பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்து. (வ 14-20)

1. மெல்கிசேதேக்கு லேவி கோத்திரத்திலிருந்து வராமல், பெரிய ஆசாரியத்துவத்தை பெற்றிருப்பது போலவே இயேசுவும் யூதா கோத்திரத்தில் இருந்து வந்து மேன்மையா ஆசாரியத்துவத்தை பெற்றுயிருக்கிறார். (வ 13-15)
   a. யூதா கோத்திரத்தில் இருந்து யாரும் பலிபீடத்தில் ஊழியம் செய்தது இல்லை. (வ13)
   b. இயேசு யூதா கோத்திரத்தில் பிறந்தார் (ஆதி 49:10; ரோம 1:4,5); அவர் யூதா கோத்திரத்துச் சிங்கம் (வெளி5:5)
2. இயேசு கிறிஸ்து மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின் படி ஆசாரியராக மாறாமல் மெல்கிசேதேகெகின் முறைமையின் படியே அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின் படியே ஆசாரியரானார். (வ16-17)
   a. பலவீனமான நியாயப்பிரமானத்தின் படி அவர் ஆசாரியராக மாறவில்லை என்பது அவரது ஆசாரித்துவத்தின் மேன்மையை காண்பிக்கிறது (வ 18-19)
3. லேவி ஆசாரியர்களை ஏற்படுத்தின நியாயப்பிரமாணம் எப்படிப்பட்டதாக இருந்தது? (வ 18-19)
   a. பெலவீனமுள்ளது
   b. பயனற்றது
   c. ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை (ரோம 8:3)
4. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஆணையினால் ஆசாரியராக இருக்கிறார், இது மாறிப்போகாது (வ20)

5. இயேசுவின் ஆசாரியத்துவம் ஏன் மாறிப்போகாது? (வ 21-25)
    a. ஆரோனின் வம்சத்தில் இருந்து வந்த பிரதான ஆசாரியர்கள் மரணத்தினால் நிலைத்திருக்க கூடாதவர்கள் (வ 22,); ஆரோனும் மரித்து மோசெராவில் அடக்கம் பண்ணப்பட்டான் (உபா 10:6) அநேக ஆசாரியர்கள் மாறிமாறி வர வேண்டியதாக இருந்தது (வ 23)
    b. ஆனால் இயேசு மரணம் இல்லாதவர். என்றென்றைக்கும் நிலைத்திருக்க கூடியவர். (ரோம 6:9); அவருக்கு பிறப்பும், இறப்பும் கிடையாது (வ 3) ஆகையால் அவருடைய உடன்படிக்கையும் மாறாதது (வ 21-22)

இ. இயேசு மாறாதா ஆசாரியத்துவமுடையவராய் இருப்பது நமக்கு எந்த விதத்தில் நன்மையானது? (வ 25-28)

1. நமக்குகாக வேண்டுதல் செய்யும் படி எப்பொழுதும் உயிரோடு இருக்கிறார். (வ25)
    a. வேண்டுதல் = ஜெபித்தல் (அ) இன்னொருவருக்காக மன்றாடுதல்
    b. பார்க்கவும் 1 யோவா 2:1,2; லூக் 22:31,32
2. நம்மை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார் (வ25)
3. பரிசுத்தர் (வ26)
4. குற்றமற்றவர் (வ26)
5. மாசில்லாதவர் (வ26)
6. பாவிகளுக்கு விலகினவர் (வ26)
7. வானங்களிலும் உயர்ந்தவர் (வ 26)
8. இயேசுவே நமக்கு ஏற்ற பிரதான ஆசாரியராக இருக்கிறார் (வ 26) ஏன்?
    a. அவர் நம்மை போல சோதிக்கப்படவர் (எபி 4:15))
    b. நம்மை புரிந்துக்கொள்பவர் (எபி 4:15)
    c. இரக்கமும், உண்மையும் உள்ளவர் (எபி 2:17)
    d. நமக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் ( எபி 2:18)
9. லேவிய ஆசாரியர்களை போல, அவர் தினமும் பலியிட தேவையில்லை. ஒரு தரும் என்னுடைய எல்லா பாவத்திற்காகவும் தம்மைதாமே பலியிட்டதினால் என்னுடை சொந்த பாவங்களை மன்னித்தார். (வ 27)
    a. கிறிஸ்துவுக்குள் தொடந்து நான் இருந்து, அவருடைய வசனத்தின் படி நடக்கும் போது இயேசுவின் இரத்தம் தொடர்ந்து என்னுடைய பாவத்தை கழுவுகிறது. (எபே 1:7; 1 யோவா1:7)
10. இயேசு பெலவீனமுள்ளவர் அல்ல (வ 28)

## அதிகாரம் 8

## எபிரெயர் 8:1-13

### I. கிறிஸ்தவம் மேன்மையான ஆசாரிய ஊழியத்தை கொண்டிருக்கிறது (8:1-5)

**அ.** “மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்” (வ 1) சென்ற அதிகாரத்தில் இயேசுவின் ஆசாரியத்துவத்தையும், அது எப்படி மெல்கிசேதேக்குவிடம் ஒத்துப்போகிறது என பார்த்தோம், ஆனால் ஏன் நாம் இவைகள் எல்லாவற்றையும், அதாவது பிரமாணங்களையும், ஆசாரியத்துவங்களையும் பார்த்தோம் என்பதற்கான காரணத்தை இங்கு கூறுகிறார்? (வ1-5)

1. இயேசு கிறிஸ்து பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார் (வ 1; எபி 1:3; அப் 7:56; எபே 1:20,21)
2. இயேசு கிறிஸ்து நமக்காக பிரதான ஆசாரியராக பரோலகத்தில் இருக்கிறார். (வ2)
    a. பழைய ஏற்பாட்டு பரிசுத்த ஸ்தலம் மனுசனுடைய கைகளினால் உண்டாக்கப்பட்டது. (யாத் 25:8) பரலோகத்தில் உள்ள பரிசுத்த ஸ்தலம் மனுசனால் உண்டாக்கப்படவில்லை, அது கர்த்தரலால் உண்டாக்கப்பட்டது.
    b. அவர் நமக்காக அங்கே இருந்து ஆசாரிய ஊழியம் செய்கிறார். (வ2). இயேசு நமக்காக தேவனிடத்தில் பேசுகிறார். (ரோம 8:34),
3. “பலிகளையும், காணிக்கைகளையும் செலுத்தும்படி நியாமிக்கபடுகிறான்”- இயேசு செலுத்திய பலி நியாயப்பிரமானத்தின் கீழ் ஊழியம் செய்து கொண்டிருந்த, ஆசாரியர்களைப் போல அனுதினமும் பலியிட வேண்டியதாக இருக்கவில்லை, இயேசு தன்னைதானே ஒருமுறை பலியாக கொடுத்ததீனால் பாவமன்னிப்பை ஏற்படுத்தினார், இயேசு பலியாக செலுத்தின தம்முடைய சொந்த இரத்தம் தேவன் விரும்பியதை அனிதினமும் தொடர்ந்து செய்து வருகிறது (எபி 9:12;14; 1யோவா 1:7-9)
4. இயேசு பூமியில் ஆசாரியராயிருக்கமாட்டார் (வ 4)
5. மோசேயின் கூடாரமானது நிழலாய் இருக்கிறது, பரலோக கூடாரத்தின் நிழலுக்கு ஒத்திருக்கிறது (வ5)-
    a. நியாயப்பிரமாணத்தின் காரியங்கள் நிழழாய் இருக்கிறது என பவுல் இன்னும் ஒரு இடத்தில் கூறியிருக்கிறார். (கொலே 2:17).
    b. நிழல் என்பது நிரந்திரமான ஒன்று இல்லை.

6. இயேசு கிறிஸ்து விசேஷித்த புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராயிருக்கிறார் (வ 6) –
    a. புதிய உடன்படிக்கை எப்படிப்பட்டடது என ஆசிரியர் கூறுகிறார்?
        i. விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்டது – புதிய உடன்படிக்கையின் கீழ் நமக்கு அருமையான, மகா மேன்மையான வாக்குத்தத்தங்களை இருக்கிறது. (1 பேது 1:3,4); புறஜாதிகளும் தேவனுடைய பிள்ளைகளாய் மாறும் அருமையான வாய்ப்பு நமக்கு புதிய உடன்படிக்கையினால் கிடைந்திருக்கிறது. (கலா 3:26-27)
        ii. இயேசு இந்த புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார்- மோசே பழைய ஏற்பாட்டுக்கு மத்தியஸ்தனாய் இருந்தான் (யோவா 1:17; கலா 3:19), அவன் நிழல் மாத்திரமே
        iii. இது முக்கியமானது - ஒருவர் இரட்சிப்படைய கண்டிப்பாக புதிய ஏற்பாட்டு சட்டத்திற்கு கீழ்படிய வேண்டும்.

## II. தேவன் பழைய உடன்படிக்கையை மாற்றி புதிய உடன்படிக்கையை கொண்டு வந்தார் (8:7-13)

அ. பழைய உடன்படிக்கை மாற்றபட காரணம் என்ன ? (வ 7-9 = எரே 31:31-34)

1. “பிழையுள்ளதாக இருந்தது” (வ7) – பழைய உடன்படிக்கை அதாவது பழைய ஏற்பாடு தன்னில் தானே நீதியிள்ளதாக இருந்தது (ரோம 7:12); ஒருவர் நியாயப்பிரமாணம் முழுமையாகக் கைகொண்டால் மட்டுமே இரட்சிப்பை அடைய முடியும் ஆனால் அப்படிப்பட்ட காரியம் கூடாததாய் இருந்தது. (கலா 3:10; யாக் 2:10,11);
2. “புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வந்தது (வ8)”- இந்த பழைய பிரமாணத்தை தேவன் குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமே கொடுத்தார் (கலா 3:19-25), இயேசு கிறிஸ்து வந்து, மரித்ததினால் பழைய ஏற்பாட்டை ஒழித்துவிட்டார் (கொலே 2:14,15; எபே 2:15)
3. இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் கொடுத்த பழைய உடன்படிக்கையில் நிலைநிற்காமல் அந்த பிரமாணத்தை அவமாக்கினார்கள், அதை முறித்தார்கள் (வ9; எரே 31:32; எசா 24:5) -பார்க்கவும் எரே 9:13,14; “உடன்படிக்கை” என்பது இரண்டு நபர்களுக்கு இடையில் செய்யபட கூடியது; தேவனுக்கு இஸ்ரவேல் ஜனங்களுக்கும் செய்யப்பட்டது; தேவன் விடுதலையைக் குறித்த தன்னுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார், ஆனால் எபிரெயர்கள் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவில்லை, அதாவது அவர்கள் தங்குளுடைய பங்கை நிறைவேற்ற வில்லை.

4. புதிய உடன்படிக்கை வந்த படியால் பழைய உடன்படிக்கை நாள் பட்டதுமாயிருக்கிறது (வ 13)

ஆ. புதிய உடன்படிக்கையின் மேன்மைகள் (வ 10-12)

1. “மனதிலே வைத்து இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது” (வ 10) – பழைய ஏற்பாடு கற்களில் எழுதப்பட்டிருந்தது. அது உடன்படிக்கை பெட்டிக்குள் மூடி வைக்கப்பட்டிருந்தது (எபி 9:4; யாத் 25:21; 2 கொரி 3:7); ஆனால் புதிய ஏற்பாடு நம்முடைய இருதயமாகிய சதைகளில் எழுதப்பட்டிருக்கிறது (2 கொரி 3:2); இந்த புதிய உடன்படிக்கையின் மூலமே நாம் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் (யாக் 1:18); இது ஜீவனுள்ளதாய் இருக்கிறது (ரோம 8:2); இதினால் நான் தேவனுடைய பிள்ளையாக மாறு கிறேன். நம்முடை இருதயத்தில் இருக்கிற புதிய ஏற்பாடு நம்மை தேவனுக்கு பிரியமானதை செய்ய வைக்கிறது.
2. “எல்லாரும் என்னை அறிவார்கள் “ ”ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டியதில்லை” (வ 11) – பாக்கவும் 2 இராஜா 22. பழைய உடன்பாட்டில் பழைய பிரமாணத்தை போதிப்பதற்கு, அதில் தேறினவர்கள் இருந்தனர். (எஸ்றா 7:9-10). புதிய ஏற்பாட்டில் குருமார்களோ, வேதபார்ரோ இல்லை. எல்லாரும் புதிய உடன்படிக்கை புரித்து கொண்டு அதை போதிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றனர். (எபி 3:13; 10:25; 1 யோவா 2:27). யாரும் தெரியாது என சொல்ல தப்பிக்கொள்ள முடியது
3. “கிருபையாய் மன்னித்து” (வ 12) - முதலாம் உடன்படிக்கையின் கீழ் பாவங்கள் முழுமையாய் போகவில்லை. (எபி 9:9); ஆனால் இயேசுவின் புதிய உடன்படிக்கை பாவங்களை பூரணமாய் போக்குகிறது (எபி 9:12,14; மத் 26:28). புதிய ஏற்பாட்டு காலத்தில், நாம் தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்தில் நடக்கும் வரைக்கும் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம் (1 யோவா 1:7-9).

# அதிகாரம் 9

**எபிரெயர் 9:1-28**

**I. முதலாம் உடன்படிக்கையின் ஆராதனை முறைகளும், பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் (9:1-10)**

அ. “பரிசுத்த ஸ்தலமென்னப்படும்” (வ 2) அதில்

1. குத்துவிளக்கும் - யாத் 25:31-40; எண் 8:2-4; லேவி 24:1-4
2. “மேஜையும்” – யாத் 25:23,23
3. “தேவசமுகத்தப்பங்களும்”- லேவி 24:2-8
4. “இரண்டாந் திரை” – பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் நடுவே தேவனால் கட்டளையிடப்பட்ட திரையை குறிக்கிது (யாத் 26:33; மத் 27:51)

ஆ. “இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது” (வ 3-5)

1. பொன்னாற்செய்த தூபகலசம் (வ 4)– லேவி 16:12
2. உடன்படிக்கை பெட்டி (வ 4) – யாத் 25:10-22
    a. அந்த பெட்டிக்குள் (வ 4)
        i. மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம்
        ii. ஆரோனுடைய தளிர்த்த கோலும்
        iii. உடன்படிக்கையின் கற்பலகையும் இருந்தன
    b. உடன்படிக்கை யின் மேல் கிருபானம் இருந்தது (யாத் 25:20-22)
    c. கிருபாசனத்தை கேருபீன்கள் நிழலிட்டிருந்தன (யாத் 25:18-20)

இ. “முதலாம் கூடாரம்” = பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியனின் வேலை என்ன? (வ 6; வ 2)

1. ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்ற வேண்டும். அதற்காக அவன் பரிசுத்த ஸ்தலத்தில் நித்தமும் பிரவேசிக்க வேண்டியதாக இருந்தது(வ 6)
    a. ஆசாரியன் குத்துவிளக்குகளை ஏற்றுவான் (லேவி 24:2-4)
    b. தூபவர்க்கமிடுகிறவனாக இருக்கிறான் (லேவி 24:7)
    c. தேவ சமுகத்தப்பங்களை மாற்றுகிறவனாகவும் இருந்தான் (லேவி 24:5-10)

ஈ. மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியனின் வேலை என்ன? (வ 7)

1. வருசஷத்திற்கு ஒரு முறை பிரவேசிப்பான்
2. அதுவும் இரத்ததோடு பிரவேசிப்பான்

உ. பழைய பிரமாணத்தை பற்றி எபிரெய ஆசிரியர் வசனம் 9,10 -யில் கூறும் முக்கியமான செய்திகள் என்ன?

1. “அந்த கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாயிருக்கிறது” (வ9) – பழைய பிரமாணம் பொருளாயிராமல், நிழலாய் இருக்கிறது (எபி 10:1). பழைய பிரமாணம் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது என கொலோசெயர் 2:17 -யில் பவுல் குறிப்பிடுகிறார். நிழலைவிட பொருளே பெரியதுழ
2. “காணிக்கைகளும் பலிகளும், ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகளாம்” (வ9)- பழைய பிரமாணம் குறிப்பிட்ட நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டது (கலா 3:19), வாக்குத்தத்தத்தைப் பெற்ற சந்ததி வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு கொடுக்கப்பட்டது (கலா 3:19), நியாயப்பிரமாணமாகிய பழைய பிரமாணம் கிறிஸ்து வரும்வரை இஸ்ரவேல் ஜனங்களை அக்கிரமங்களினிமித்தம் அவர்களை காவல்பண்ணும் படி கொடுக்கப்பட்டது (கலா 3:21-24). பழைய பிரமாணம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு வேலியைப்போல இருந்தது என நாம் கூறலாம். பழைய பிரமாணத்தின் கீழ் செலுத்தப்பட்ட காணிக்கைகளும், பலிகளும் மனச்சாட்சியை பூரணப்படுத்தாமல், அவைகள் இஸ்ரவேல் ஜனங்களை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்திய உபாத்தியாய் மாத்திரம் இருந்தது. (கலா 3:24)
3. “சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் நடைந்தேறும் கட்டையிடப்பட்ட” (வ10)- சீர்திருத்தல் இயேசுவின் மூலமே வந்தது (மத் 5:17-48). கிறிஸ்து சிலுவையில் நியாயப்பிரமாணத்தை ஒழித்துவிட்டார் (எபே 2:15). இனியும் மாம்ச சடங்கசரங்கள் இல்லை, அவைக்கள் சீர்திருத்தப்பட்டன (கொலோ 2:14-21)

## II. கிறிஸ்து தன்னுடைய சொந்த இரத்தத்தினால் நித்திய மீட்பை நமக்கு உண்டுபண்ணினார் (9:11-17)

அ. இயேசு கிறிஸ்து நமக்கு எப்படி நித்திய மீட்பை ஏற்படுத்தினார் (வ 11,12)?

1. “வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு” (வ 11) – பழைய ஏற்பாட்டில் இருந்த பிரதான ஆசாரியர்கள் நிழலாய் மாத்திரமே

இருந்தார்கள் (எபி 10:1). கிறிஸ்து உண்மையான, நிஜமான பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டார்

2. “பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும் பிரவேசித்து (வ11) – இயேசு கையினால் செய்யப்பட்ட கூடாரத்திற்குள் பிரவேசிக்கவில்லை. அவர் பரலோகத்திற்குள் பிரவேசித்திருக்கிறார் (எபி 8:1,2; அப் 1:9,10)
3. “தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்தார்” (வ12) – பழைய பிரமாணத்தின் கீழ் பிரதான ஆசாரியர்கள் பூமிக்குரிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இரத்தத்தோடே வருசத்தோறும் பிரவேசிப்பார்கள் (எபி 9:7). ஆனால் இயேசு ஒரே முறை பலியிடப்பட்டு சொந்த இரத்ததை சிந்தி, பரலோகத்திற்கு சென்று நமக்கு நித்திய மீட்பை ஏற்ப்படுத்தியிருக்கிறார் (7:26,27).

ஆ. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை என்ன செய்வது நிச்சயம்? (வ 13,14)

1. கிறிஸ்துவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது நிச்சயம் (வ14)
   a. கிறிஸ்து நித்தய ஆவியினாலே தம்மைதாமே பழுதற்ற பலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்
   b. பழைய ஏற்பாட்டின் பலிகள் மன்ச்சாட்சியை பூரணப்படுத்தவில்லை. ஆனால் இயேசுவின் பலியானது நம்மை தேவனுக்கு ஊழியம் செய்ய நம்மை பூரணப்படுத்துகிறது.

இ. இயேசு கிறிஸ்து எதற்காகவும் மரணமடைந்ததாகவும் எபிரெய ஆசிரியர் கூறுகிறார்? (வ 15-17)

1. முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்தி செய்யும் பொருட்டு அவர் மரணமடைந்தார் (வ15)
   a. பழைய ஏற்பாட்டின் படி காளை,வெள்ளாட்டுகிடாவின் இரத்தம் பாவங்களை போக்கவில்லை (எபி 10:4); மாறாக இயேசுவின் பலியான இரத்தம் பழைய ஏற்பாட்டின் கீழ் கீழ்படிந்தவர்களையும் மீட்கிறது(ரோம 3:25,26; கலா 3:24-27)
2. மரணமுண்டான பின்பே மரண சாசனம் உறுதிப்படும் அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லை (வ17)
   a. மரண சாசனம் (உயில்) = ஏற்பாடு; இயேசுவின் சிலுவை மரணத்தினால் பழைய ஏற்பாடு அகற்றப்பட்டு, ஒழிக்கப்பட்டு புதிய ஏற்பாடு வந்தது (எபே 2:15; எபி 8:6-11;எபி 10:9)

### III.கிறிஸ்துவின் இரத்தம் மேன்மையானது (9:18-28)

அ. பழைய ஏற்பாட்டின் கீழ் மிருகங்களின் இரத்தத்தின் பயன்பாடுகள் என்னென்ன? (வ 18-22)

1. முதலாம் உடன்படிக்கை இரத்தமில்லாமல் பிரதிஷ்டை பண்ணப்படவில்லை (வ18; யாத் 24:6-8)
2. மோசே கூடாரத்தின் மேலும் ஆராதனைக்குரிய சகல பணிமுட்டுகளின் மேலும் இரத்தத்தை தெளித்தான் (வ21)
3. சுத்திகரிப்பு உண்டாக, மன்னிப்பு கிடைக்க இரத்தம் தேவைப்பட்டது (வ22; லேவி17:11).

ஆ. கிறிஸ்துவின் பலி எப்படி மேன்மையானதாக இருக்கிறது? (வ23-28)

1. பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது"(வ23)- பழைய ஏற்பாட்டு நிழல், நமக்கு பாவம் மன்னிக்கப்பட இரத்தம் சித்தப்பட வேண்டும் என்பதை காண்பித்திருக்கிறது. ஆனல் இயேசுவின் பலியினால், அவருடையமேலான இரத்தம் சித்தப்பட்டதால் நமக்கு நித்திய மீட்பு கிடைத்திருக்கிறது.
2. இயேசு நமக்காக பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசியாமல்; பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில் எதற்காக பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பானோ அதைவிட மேலான காரியத்திற்காக (நித்திய மீட்பிற்காக) இயேசு நமக்காக பிரவேசித்திருக்கிறார், இயேசுவின் பலி மேன்மையானது.
3. இயேசு பழைய ஏற்பாட்டு பிரதான ஆசாரியர்களைப்போல அநேகதரம் அதாவது வருஷந்தோறும் பரிசுத்த ஸ்தலத்திற்கு பிரவேசியாமல், நமக்காக தன்னுடைய சொந்த இரத்தத்தை ஒரே தரம் சிந்தி (பலியிடப்பட்டு) பரலோகத்திற்கு பிரவேசித்து நித்திய மீட்பை ஏற்ப்படுத்தியிருக்கிறார். (வ 25,26)
4. நம்மை இரட்சிக்க இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (வ 27,28)

## அதிகாரம் 10
## எபிரெயர் 10:1-39

### I. பழைய ஏற்பாட்டு பலிகளின் இயலாமை (எபி 10:1-4)

அ. பழைய ஏற்பாட்டு பலிகளின் இயலாமையை குறிப்பிடவும் (வ 1-4)

1. “பூரணப்படுத்தவில்லை”(வ1)- பழைய ஏற்பாடு பொருளாயிராமல், நிழலாய் மாத்திரம் இருக்கிறபடியால், அவைகள் பூரணப்படுத்தாமல், பூரணப்படுத்துகிற கிறிஸ்துவின் பலிக்கு நேராக வழி நடத்தியது. (எபி 9:9-15; கலா 3:19-24)
2. “பாவங்கள் உண்டென்று அவைகளினாலே வருஷந்தோறும் நினைவுகூறுதல் உண்டாயிருக்கிறது” (வ 2,3)- பாவங்களின் நிமித்தம் வருஷத்தோறும் செலுத்தப்படும் பழைய ஏற்பாட்டு பலி, பாவங்கள் இருக்கிறது என்பதை உணர்த்தி கொண்டே இருக்கிறது.
3. “பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே”(வ4)- பழைய ஏற்பாட்டு பலிகளினால் பாவங்களை நிவிர்த்தி செய்ய முடியவில்லை

### II. கிறிஸ்துவின் மேன்மையான பலி (10:5-20)

அ. தேவன் எதன் மீது பிரியப்படாமல், எதன் மீது பிரியப்படுகிறார் என்பதை சங்கீதம் 40:6,7-யிலிருந்தும், சங்கீதம் 51:16-யிலிருந்தும் நமக்கு எபிரெய ஆசிரியர் மேற்கொள் காண்பிக்கிறார்? (1 சாமு 15:22)

1. தேவன் பலியையும், காணிக்கையையும் விரும்பவில்லை (வ 5,8)
2. தேவனுக்கு சர்வாங்க தகனபலிகளும், பாவ நிவாரணபலிகளும் பிரியமானதல்ல. (வ 6,8)
3. உம்முடைய சித்தத்திற்கு செய்ய வருகிறேன் (வ7,9)- இது இயேசுவை பற்றிய தீர்க்கதரிசனமாக இருக்கிறது (சங் 40:6,7). தேவன் பலிகளினால் பிரியப்படுகிறவர் அல்ல; மாறாக தேவன் பலிகளை கொடுத்ததிற்கு காரணம் நாம் தேவனுடைய கீழ்படிய வேண்டும் என்பதே. தேவனுக்கு கீழ்படிதலை விட்டுவிட்டு பலிகள் செலுத்துவதில் ஒரு பிரயோஜனமுமில்லை. தேவனுக்கு கீழ்படிவதில் இயேசுவே நமக்கான முன் மாதிரியாயிருக்கிறார். (எபி 5:8,9)

ஆ. கிறிஸ்துவின் மேன்மையான பலி நமக்கு செய்திருப்பதை குறிப்பிடவும்? (வ 10-20)

1. நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்(வ 10; 1 யோவா 1:7-9)
2. பாவங்களுக்காக தம்மைதாமே ஒரே பலியாக செலுத்தி, நமக்காக தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து, தம்முடைய சத்துருக்களைத் தமது பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் காத்துக்கொண்டிருக்கிறார் (வ12,13)

3. ஒரே பலியினாலே நம்மை பூரணப்படுத்தியிருக்கிறார் (வ14, எபி 9:14;யோவா 10:10)
4. நம்முடைய அக்கிரமங்கள் நினைக்கப்படுவதில்லை (வ 16-17; எபி 8:11-12)
5. இனிப் பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்படுவதில்லை (வ18)
6. நாம் பரிசுத்த ஸ்தலத்திற்கு பிரவேசிப்பதற்கு இயேசு புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார். (வ 19; யோவா 14:6)
7. அந்த மார்க்கத்தின் வழியாய் பிரவேசிக்க அவருடைய இரத்ததினால் நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது. (வ20)- இயேசுவின் இரத்தத்தினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது மற்றும் பாவங்கள் நினைக்கப்படுவதில்லை என்கிறது நமக்கு தைரியத்தை கொடுக்கிறது. (1 யோவா 2:28).

**III. கிறிஸ்துவின் மேன்மையான பலி நமக்கு இருக்கிற படியால் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் (10:21-25).**

அ. நமக்கு ஒருவர்(கிறிஸ்து) இருக்கிற படியால் நாம் செய்ய வேண்டியவைகள் (வ21)

1. “துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்”(வ22)- தேவனுடைய வார்த்தையின் படி நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்(1 தீமோ 1:18); இயேசுவின் இரத்தம் நம்முடைய மனசாட்சியை பூரணப்படுத்துகிறது. (எபி 9:14)
2. கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும் (ரோம 6:3-6)
3. உண்மையுள்ள இருதயத்தோடும்
4. விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் (வ22; எபி 6:12)
5. நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கடவோம் (வ22; எபி 4:14)
6. அன்புக்கும் நற்கிரியைக்கும் ஏவப்பட வேண்டும் என்பதற்காக ஒருவரைஒருவர் கவனிக்க வேண்டும் (வ24)
7. சபை கூடிவருவதை விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல வேண்டும் (வ 25;எபி 3:14)

**IV.எச்சரிப்பு நான்கு: (10:26-31)**

அ. சபை கூடிவரவேண்டும் என்கிற அறிவை அடைந்தவர்கள் மனப்பூர்வமாக அதைவிடும் போது என்ன நடக்கிறது? மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களுக்கு கூறப்படும் எச்சரிக்கை என்ன? (வ 26-29)

1. மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவர்களுக்கு பாவங்களின்மித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இல்லை (வ26)

2. கோபாக்கினையுமே இருக்கும்(வ27; ரோம2:5);மனப்பூர்வமாய் பாவஞ்செய்கிறவன் தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதிக்கிறான்(வ29); தன்னை மேன்மையான இடத்திற்கு கொண்டு சென்ற இரத்தத்தை அசுத்தமென்றென்னி, கிருபையின் ஆவியை நித்திக்கிறான், அவனுக்கு கொடிதான ஆக்கினை இருக்கிறது
3. தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும் (வ31)

## V. தைரியத்தையும், பொறுமையும், விசுவாசத்தையும் விட்டுவீடாதிருக்கும் படியான புத்திமதி(10:32-39)

அ. எபிரெயர்கள் தங்களுடைய முந்தின நாட்களில் செய்த காரியங்கள், அவர்கள் 1.பிரகாசமாக்கப்பட்டிருந்தார்கள், 2.உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தை சகித்தார்கள்(வ32), 3. நிந்தைகளாலும், உபத்திரவங்களாலும் வேடிக்கையாக்கப்பட்டு, அப்படி நடத்தப்பட்டவர்களுக்கு பங்காளிகளுமானார்கள்(வ33), 4.ஆஸ்திகளை கொடுத்து ஊழிய செய்தார்கள் (வ34), இவைகள் அனைத்துக்கும் பலன் இருக்கிறது, ஆகையால் கிறிஸ்துவுக்குள் இருக்கிற தைரியத்தை விட்டுவிடாமல் இருக்கும் படி ஆசிரியர் அவர்களை உற்சாகப்படுத்திகிறார், இது நமக்கும் பொருத்துகிறது (எபி 6:10-12)

ஆ. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற பொறுமை நமக்கு வேண்டும் (வ36, எபி12:1)

இ. ஆத்துமா ஈடேற விசுவாசமுடையவர்களாய் இருக்க வேண்டும், பின்வாங்கினால் தேவன் நம்மீது பிரியமாய் இருக்க மாட்டார். (வ 37-39)

## அதிகாரம் 11
## எபிரெயர் 11:1-40

### I. விசுவாசம் என்பது என்ன ? (11:1-3)

அ. "விசுவாசம்" என்பது

1. "நம்பப்படுகிறவைகளின் உறுதி" (வ1) –
    a. "உறுதி" என்பது அடித்தளம், உறுதியான அஸ்திபாரம், மெய்யாகவே இருப்பது, நிலையான மனநிலை, தீர்மானம் எனப் பொருள்படும். தேவனை பற்றிய நம்முடைய எல்லா நம்பிக்கைக்கும் விசுவாசமே அடிதளமாகவும், அஸ்திபாரமாகவும் இருக்கிறது.
    b. விசுவாசமுள்ள ஒருவர், கண்ணுக்குப் புலப்படாத ஒரு பொருளை அது திடமாகவும்,முழுமையாகவும் பார்க்க முடியும். இதை புரிந்துக்கொள்ள ஆபிராகமின் விசுவாசத்தை பற்றி பவுல் கூறின வார்த்தைகளை கவனிக்கவும். **"நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்"** ரோம 4:18
2. "காணப்படாதவைகளின் நிச்சயம்" (வ1) –
    a. "நிச்சயம்" என்பது ஆதாரம், சோதித்தறியப்பட்டது, நாம் தேவனை கண்மூடிதனமாக பின்பற்ற வேண்டும் என்பது இல்லாமல், நம்முடைய விசுவாசம் நிச்சயமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும். (2 தீமோ 1:12; யோவா 6:69), ஆனால் இந்த ஆதாரம் கண்களினால் பார்க்க முடியாதவைகளை பற்றியதானது. நாம் சுவாசிக்கிற காற்றை நாம் கண்களினால் பார்ப்பதில்லை, அதினால் காற்றே இல்லை என கூற முடியாது, காற்று இருக்கிறது என்பதற்கு ஆதாரமே நான் உயிரோடு இருக்கிறேன் என்பது அல்லவா
    b. நாம் தேவனை விசுவாசிப்பதற்கான ஆதாரத்தை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார் (ரோம 1:19,20; அப் 14:17; யோவா 1:18; அப் 13:31-33; லூக் 1:1-3). விசுவாசம் நம்மை காணப்படாதவைகளைக் காண கூடியவர்களாக்குகிறது (2 கொரி 5:6; ரோம 8:24;25) .
3. நம்முடைய விசுவாசம் எப்படி இருக்கிறது/இருக்க வேண்டும் ? (வ3)
    a. உலகங்கள் (யுகங்கள்) தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டது என விசுவாசிக்கிறோம் (யோவா 1:1-3)
    b. காணப்படுகிறவைகள், தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை என அறிந்திருக்கிறோம்
        i. தேவன் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் இந்த உலகங்களை படைக்கவில்லை., தேவன் இல்லாதவைகளிலிருந்து தேவன் தம்முடைய வார்த்தையினால் உலகத்தை உண்டாக்கினார் (சங் 33:6)

## II. விசுவாசம் தேவனைப் பிரியப்படுத்த கூடியது (11:4-6)

அ. ஆபேல் (வ4):

1. ஆபேலின் பலி தேவனைப்பிரியப்படுத்த காரணம் என்ன? அவனுடைய பலி விசுவாசத்தினால் மேன்மையான பலியாக இருந்தது. (ஆதி 4:4)

ஆ. ஏனோக்கு (வ5)

1. ஏனோக்கின் விசுவாசம் அவனை தேவனுக்கு பிரியவானாக மாற்றி இருக்கிறது (ஆதி 5:24), இவன் தீர்க்கதரிசியாக இருந்தான் (யூதா 14)

இ. விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்த முடியாது (வ 6); அவரை நம்புகிறவர்கள் அவர் இருக்கிறார் எனவும், அவரை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என விசுவாசிக்க வேண்டும். (எபி 10:38)

ஈ. நோவா எதை குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்றான்? அதினால் அவன் செய்தது என்ன? (வ7)

1. "தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்து" –
    a. தேவன் நோவாவிற்கு வெள்ளத்தை (ஜலப் பிரளயம்) குறித்து எச்சரிப்பு கொடுத்தார் (ஆதி 7:4; 6:3,13)
    b. நோவா தேவனிடம் பெற்ற எச்சரிப்பின் படி அவருடைய கட்டளையின் படி பேழையை உண்டுபண்ணினான் (ஆதி 6:13,22). அவன் ஏறக்குறைய 100 ஆண்டுகள் பேழையை கட்டவும், பிரசங்கிக்கவும் செய்தான் (2 பேது 2:5); ஆனால் இந்த வெள்ள எச்சரிப்பு நோவாவும், அவனுடைய குடும்பத்தாரும் பேழைக்குள் பிரவேசிக்கிறதற்கு முன்பு நடந்ததில்லை; நோவா இதற்கு முன்பு நடந்திறாதா ஒரு காரியத்திற்காக செயல்ப்பட்டிருக்கிறான் (11:7).
    c. இதுதான் விசுவாசம் காணப்படாதவைகளின் நிச்சயம், நோவா தேவனுடைய வார்த்தை விசுவாசித்தான், ஆனால் தேவன் சொன்ன காரியங்கள் இதற்கு முன்பு வரலாற்றில் நடந்ததில்லை (ஆதி 8:16-22); ஆனால் நோவா அதைப்பற்றி சிந்திக்காமல் தேவன் சொன்னபடியே நடக்கும் என்று "தீர்த்து", அவருடைய வார்த்தைக்கு கீழ்படிந்தான் இது கிறிஸ்தவர்களாகிய நம்மோடு பொருந்துகிறது, நாமும் நோவாவைப்போலவே எச்சரிப்பு பெற்று, விசுவாசித்து, கீழ்படிந்து, பிரசிங்கிக்கிறவர்களாக இருக்கிறோம் (2 பேது 2:5; மத் 24:37-42)
2. "நோவா விசுவாசத்தினால்"
    a. பயபக்தியுள்ளவனான்
    b. தன்னுடைய குடும்பத்தை இரட்சிக்க பேழை உண்டுபண்ணினான்
    c. உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து
    d. விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்கு சுதந்தரவாளியானான்

உ. ஆபிரகாமின் விசுவாசத்தை பற்றி எபிரெய ஆசிரியர் என்ன கூறிகிறார்? (வ 8-10)

1. ஆபிரகாம்
    a. ஆபிரகாம் தேவனால் அழைக்கப்பட்டான் (வ 8; ஆதி 12:1)
    b. தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான் (வ 8)
    c. விசுவாசத்தோடே கீழ்ப்படிந்தான், காத்திருந்தான் (வ8,10)
    d. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே பரதேசியைப் போல சஞ்சரித்தான் (வ 9; ஆதி 23:4)
    e. தேவனுடைய நகரத்துக்கு காத்திருந்தான் (வ 10)
2. நாம் (கிறிஸ்தவர்கள்)
    a. ஆபிரகாமைப் போலவே நாமும் இருக்கிறோம்
    b. ஆபிரகாமுக்கு தேவன் அழைப்பை கொடுத்தது போலவே நம்மையும் சுவிசேஷத்தினால் அழைத்திருக்கிறார் (2 தெச 2:14; எபி 3:1)
    c. நாம் சுவிசேஷத்திற்கு கீழ்படிந்திருக்கிறோம், காத்திருக்கிறோம் (1 தெச 1:6-10)
    d. நிலையில்லாத பூமியில் நாமும் பரதேசிகளாயிருக்கிறோம் ( 1பேது1:2,17)
    e. நம்முடைய குடியிருப்பும், நம்முடைய நகரம் பரலோகம் தான் (2 கொரி 5:1; பிலி 3:20)

ஊ. சாராளின் விசுவாசம் எப்படிப்பட்டது? (வ 11-12)

1. சாராள் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று எண்ணினாள்; அந்த விசுவாசத்தினால் (எண்ணத்தினால்), பெலனடைந்து, பிள்ளைப் பெற்றாள். ஆபிரகாம் தன்னுடைய பலவீனத்தை எண்ணாதிருந்தான் (ரோம 4:19); தேவனை பற்றிய நம்முடைய விசுவாசமும், நேர்மறையான எண்ணங்களும் வல்லமையுள்ளவைகள் (வ 12)

எ. எபிரெயர் 11:13-16 -யிலிருந்து நாம் நம்முடைய விசுவாசத்திற்கு கற்றுக்கொள்ளும் பாடம் என்ன ?

1. “விசுவாசத்தோடே மரித்தார்கள்” (வ 13)
    a. ஆபிரகாம், அவனுடையவர்களும் விசுவாச பார்வையுடையவர்களாயிருந்தார்கள் (வ 13), தேவன் வாக்குத்தத்தம் பண்ணினவுடன் அதை கிடைத்துவிட்டது என பார்த்தார்கள், அது தூரத்திலிருக்கிறதாக கண்டார்கள் (யோவா 8:56)
    b. “நம்பி அணைத்துக்கொண்டார்கள்” வாக்குத்தத்தம் பண்ணபட்டவைகளை நழுவ விடவில்லை (எபி 4:11)
    c. பூமியின் மேல் தங்களை அந்நியரும், பரதேசிகள் என்று அறிக்கையிட்டார்கள் (வ 13)- தாங்கள் இந்த புதிய தேசத்தை நாடிச் செல்லுகிற பரதேசிகள் என்பதைத் தெரிவித்தார்கள் (அ) அறிக்கையிட்டார்கள் (வ 14)
    d. அவர்கள் தாங்கள் விட்டு வந்ததை நினைக்கவில்லை, போகவில்லை (வ 15)

e. பரம தேசத்தை விரும்பினார்கள் (வ 16; 2 கொரி 5:2)

f. விசுவாசத்தோடு மரிக்கிறவர்களுக்கு தேவன் என்ன வைத்திருக்கிறார்? (வ16) ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினார் (யோவா 14:1-3). மரணத்திற்கு பின் நித்திய வாழ்க்கை இருக்கிறது.

**IV. விசுவாசம் சோதிக்கப்பட்டு, நிருபிக்கப்பட வேண்டும் (11:17-28)**

அ. ஆபிரகாம் விசுவாசம் எப்படி சோதிக்கப்பட்டு, நிருபிக்கப்பட்டது? (வ 17-19; ஆதி 22)

1. ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்ததின் போது (வ 17; ஆதி 22:10; யாக் 2:21)
2. ஆபிரகாம் தேவன் தன்னிடம் சொன்ன வார்த்தையை எண்ணி பார்த்தான், அதாவது ஆபிரகாமிடம் ஈசாக்கின் மூலம் உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருந்ததை (ஆதி 15:5,6) நினைத்து, விசுவாசித்து தேவன் வல்லமையுள்ளவர் என விசுவாத்து பலியிட ஒப்புக்கொடுத்தான் (வ 19; ஆதா 22:5)

ஆ. யோசேப்பின் விசுவாசம் நமக்கான முன்மாதிரி (வ 22; யோசு 24:32)

இ. விசுவாசத்தினால் மோசேயின் தாய், தகப்பன்மார் ராஜாவின் கட்டளைக்கு பயப்படவில்லை; விசுவாசம் நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (வ 24)

ஈ. மோசேயின் விசுவாசம் எப்படிப்பட்டது? (வ 24-28)

1. மோசேயின் விசுவாசம்
    a. பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதையும், வெறுத்தான் (வ24)
    b. தேவனுடைய ஜனங்களோடே, துன்பத்தை அநுபவிப்பதை, தெரிந்துக்கொண்டான் (வ 25)
    c. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்தான் (வ 26)
    d. கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (வ 26; அப் 7:23)
    e. உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான்
    f. அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தான் (வ 27)
    g. பஸ்காவையும் இரத்தம் பூசதலாகிய நியமத்தையும் ஆசாரித்தான் (வ 28)
2. மோசேயின் விசுவாசம் நமக்கு கற்றுதரும் பாடம் என்ன?
    a. மோசேயின் விசுவாசம் பாவ சந்தோஷங்களையும், வீண் புகழ்ச்சியை வெறுக்க செய்தது, சரியானதை தெரிந்துகொள்ள செய்தது, சரியான எண்ணத்தை கொடுத்தது, உறுதியாய் இருக்க செய்தது, பயப்படாமல் இருக்க செய்தது என்றால் நம்முடைய விசுவாமும் அப்படியே இருக்க வேண்டும்

## V. விசுவாசம் என்பது தேவனை நம்பி வெற்றிக்கொள்வது (11:29-35)

அ. இஸ்ரவேல் ஜனங்களின் விசுவாசம் வெற்றிக்கொள்ள செய்தது (வ 29-31)

1. சிவந்த சமுந்திரத்தை கடந்து போனார்கள் (யாத் 14:10-31)
2. எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் வரப்பட்டு விழுந்தது (யோசு 6:14-20)
3. ராகாப் வேசி சேதமாகதிருந்தார்கள் (யோசு 6:17)

ஆ. நியாயாதிபதிகளின், இராஜாக்களின் மற்றும் தீர்க்கதரிசிகளின் வெற்றி (வ 31-35)

1. விசுவாச வீரர்கள்
    a. கிதியோன் என்னும் நியாயாதிபதி (நியா 6-8)
        i. தேவன் முந்நூறு பேரைக்கொண்டு வெற்றி கொடுத்தார் (நியா7:5-7; 20-25; நியா 8:22)
    b. பாராக் என்பவன் சிசெராவை ஜெயித்தான் (நியா 4:6-24)
    c. சிம்சோன் என்னும் நியாயாதிபதி (நியா 16:31)
        i. சிம்சோனின் வல்லமையான செயல்பாடுகள் (நியா 14-16)
    d. யெப்தா (நியா 11:8) என்னும் தலைவன்
        i. இவர் தேவனுடைய மக்களுக்காக அம்மோனியர்கள் மீது மாபெரும் வெற்றி அடைந்தார் (நியா 11)
    e. தாவீது என்னும் ராஜா தேவன் மீது வைத்த விசுவாத்தான்ல மல வெற்றிகளை பெற்றான் (சங் 78:70-72)
    f. சாமுவேல் என்னும் தீர்க்கதரிசி, விசுவாசத்தினால் பல தைரியமுடையவானாக இருந்தான், நியாயாதிபதியாக இருந்தான் (1 சாமு 7:15; 1 சாமு 12:20,21)
    g. பழைய ஏற்பாடு தீர்க்கதரிசிகள் – எசாயா, தானியேல், எரேமியா
2. இவர்களெல்லாரும் விசுவாசத்தினால் அடைந்த வெற்றிகளை குறிப்பிடவும்? (11:33-35)
    a. ராஜ்யங்களை ஜெயித்தார்கள்
    b. நீதியை நடப்பித்தார்கள்
    c. வாக்குத்தத்தங்களை பெற்றார்கள்
    d. சிங்கங்களின் வாய்களை அடைந்தார்க்கள் (தானி 6:19)
    e. அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள் (தானி 3:26,27)
    f. பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள் (1 சாமு 19:10-12)
    g. பலவீனத்தில் பலன்கொண்டார்கள்
    h. யுத்தத்தில் வல்லவர்களானார்கள்
    i. அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்
    j. ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள் (1 இராஜா17:17-24; 2 இரா 4:18-37)

**VI. உண்மையான விசுவாசத்திற்கு விலைக்கொடுக்க வேண்டும் (11:35-38)**

அ. விசுவாசத்திற்காக விசுவாச வீரர்கள் கொடுத்த விலைகளை பட்டியலிடவும் (வ 35-38)

1. வாதிக்கப்பட்டார்கள்
2. நிந்தைகளையும், அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அநுபவித்தார்கள்
3. கல்லெறியுண்டார்கள்
4. வாளால் அறுப்புண்டார்கள்
5. பரீட்சை பார்க்கப்பட்டார்கள்
6. பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள்
7. செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும் உபத்திரவத்தையும், துன்பத்தையும் அநுபவித்தார்கள்.
8. வானாந்தரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.
9. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள்.

**VII. நம்முடையை விசுவாசத்திற்கு பலன் இருக்கிறது (11:39,40)**

அ. விசுவாசவீரர்கள் எதை பெற்றார்கள்; எதை அடையாமற் போனார்கள் ? (வ 39)

1. "விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள்" (11:2) – விசுவாச வீரர்களின் விசுவாசம் நமக்கு உதவியாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் இவர்களின் விசுவாசத்தை நமக்கு முன்பாக வைப்பது இவ்வளவு பெரிய ஆசிர்வாதம் (12:1)
2. "வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்" – இவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது என்ன? (கலா 3:16,29) மெசியா என்னும் கிறிஸ்து மிகப்பெரிய வாக்குத்தத்தமாயிருக்கிறார் (ஆதி 3:15; தானி 7:13,14,24). கிறிஸ்துவுக்குள்ளே நாம் அனுபவிக்கும் ஆசிர்வாதங்களை அவர்கள் அனுபவிக்க வில்லை (எபே 1:3) மேசியாவின் வருகையையும் அவர்கள் பார்க்கவில்லை (லூக் 10:21-24; யோவா 8:56)

ஆ. விசுவாசத்தோடே மரித்த பழைய ஏற்பாடு விசுவாச வீரர்கள் எப்படி நம்மால் பூரணராக்கப்படுகின்றனர் ? (வ 40)

1. கிறிஸ்தவ யுகத்தில் வாழுகிற நாமே வாக்குத்தத்ததின் நிறைவேற்றமாக இருக்கிறோம் (கலா 3:19). கிறிஸ்தவ யுகத்திலேயே இந்த வாழ்க்கைக்கான (பூமிக்கு) முடிவும், நியாயத்தீர்ப்பும், நியாயத்தீர்ப்புக்கு பின் பரலோகமும் இருக்கிறது (எபி 9:26-28; வெளி 6:11). கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது மரித்த எல்லா பரிசுத்தவான்களும், விசுவாசத்தோடே மரித்த எல்லா, விசுவாச வீரர்களும் மீண்டும் நித்திய ஜீவனுக்காக நியாயத்திர்க்க எழுப்பப்படுவார்கள் (தானி 12:2,3,13)
2. நமக்கு கிடைத்திருக்கும் விசேஷித்த நன்மைகள் என்ன? எல்லாவற்றிக்குக் மேலான கிறிஸ்து (எபி 10:21), நமக்கான விசேஷித்த நன்மையாகவும், அவருக்குள் நமக்கு

விசேஷித்த ஆசிர்வாதங்களும், அவருடைய புதிய உடன்படிக்கையும் நமக்கு இருக்கிறது (எபி 8:6; எபி 7:19; எபி 10:14)

**அதிகாரம் 12**

**எபிரெயர் 12:1-29**

## I. இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓடக்கடவோம் (12:1-3)

அ. "ஆகையால்" (வ 1) என இந்த அதிகாரம் தொடங்குகிறது, இது போன அதிகாரத்தின் தொடர்ச்சியாக இருக்கிறது என்பதை காண்பிக்கிறது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் விசுவாசத்தோடு மரித்தவர்களாக, இப்பொழுது பரலோகத்திற்காகவும், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்புக்கு காத்துக்கொண்டு இளைப்பாறிகொண்டுயிருக்கிறார்கள் (தானி 12:13; வெளி 6:11; யோவா 5:27-29); அவர்கள் நம்மையல்லாமல் பூரணராக முடியாது.

ஆ. நம்மைச் சூழ்ந்து கொண்டிருப்பது என்ன? (வ 1)

1. மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன
    a. எபி 11 -யில் நாம் பார்த்த விசுவாச வீரர்களின் விசுவாச வாழ்க்கையானது கிறிஸ்தவ ஓட்டத்தை ஓடுகிற நமக்கு, உற்சாகப்படுத்த கூடிய சாட்சிகள். நம்மை சூழ்ந்த கொண்டிருக்கிறது. அவைகளின் மூலமாய் பல பாடங்களை நாம் கற்றுக்கொள்கிறோம் (ரோம 15:4)
2. நம்மை உற்சாகப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் மற்றும் பாடங்களை கற்றுதரவும் நம்மை சூழ்ந்து இந்த சாட்சிகள் நமக்கு இருக்கிறபடியால் நாம செய்ய வேண்டியது என்ன? (வ 1)
    a. "பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு" (EVERY WEIGHT) – பாவம், மனசோர்வு, மன அழுத்தம், பயம், வேதனை, சந்தேகம் மற்றும் எதுயெல்லாம் நமக்கு பாரமாக இருக்கிறதோ அது எல்லாவற்றையும் தள்ளிவிட்டு ஓட வேண்டும் (லூக் 21:34)
    b. "நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு" – ஐசுவரியமும், சிற்றின்பங்களும் மற்றும் உலக கவலைகளிம் நம்மை நெருங்கி போடக்கூடியது என இயேசு கூறியிருக்கிறார் (லூக் 8:14). பாவமானது சுமக்க முடியாத பாரமாக இருக்கிறது (சங் 38:4). இவைகளை நாம் தள்ளிவிட வேண்டியது நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மிக முக்கியமானதாக இருக்கிறது.
    c. "இயேசுவை நோக்கி ஓடக்கடவோம்" – இயேசுவே நம்முடைய விசுவாசத்தை ஆரம்பிக்கிறவராய் இருக்கிறார், முடிக்கிறவராயும் இருக்கிறார். விசுவாச வீரர்கள் விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றார்கள், ஆனால் விசுவாசத்தை ஆரம்பிப்பதே இயேசுதான் (1 பேது 1:10,11)
    d. "நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" – நமக்கு நியமிக்கப்பட்டது என்ன? (11:40) விசேஷித்த நன்மைகளை தேவன் நமக்கு நியமித்திருக்கிறார், அவருடைய புதிய ஏற்பாடு நமக்கான விசேஷித்த உடன்படிக்கையாக இருப்பதால் (எபி 8:6: 2 பேது 1:4) இயேசு நடந்த படியே

நாம் நடக்க வேண்டும் (1 யோவா 2:6), நாம் ஓட்டத்தில் வெற்றிக்கொள்ள கிறிஸ்துவின் பாதையில் (உபதேசத்தில்) ஓட வேண்டும் (2 யோவா 8).

e. "பொறுமையோடே ஓட வேண்டும்" – நம்முடைய கிறிஸ்துவ ஓட்டம் என்பது குறுகியது அல்ல; அது நீண்ட காலத்திற்கான ஓட்டமாக இருக்கிறது. ஓட்டத்தை ஓடி முடிக்கிறதாற்கு பொறுமை அவசியமாக நமக்கு தேவை. இடையில் ஓட்டத்தை நிறுத்தி விட கூடாது (எபி 10:35,36; எபி 6:11,12)

இ. நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்து எப்படி தன்னுடைய ஓட்டத்தை முடித்திருக்கிறார்? அதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? (வ 2,3)

1. "தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு" – நம்மை தேவனிடம் கொண்டு செல்லும் இரட்சிப்பின் அதிபதியாக இயேசு கிறஸ்து இருக்கிறார். நமக்கு இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறதற்கு அவர் பாடுகளினால் பூரணப்பட வேண்டியதாக இருந்தது (எபி 2:10), அவர் சிலுவையை சகிக்க வேண்டியதாக இருந்தது, ஆனால் நாம் இரட்சிக்கப்படுவோம் எண்கிற சந்தோஷம் அவருக்கு தூண்டுதலாக இருந்தது (எபி 10:4-14; எபி 2:10-14; லூக் 15:5-7). அவர் அவமானத்தை எண்ணாமல், சந்தோஷத்தை எண்ணிபார்த்தார், அதினால் அவர் வெற்றிக்கொண்டார், தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நாம் தேவனிடம் சேருகிறதற்க்கான வாய்ப்பு நமக்கு கிடைந்திருக்கிறது. (ரோம 5:12; எபி 10:19,20) இதற்கு அவமானத்தையும், சிலுவையையும் சகிக்க வேண்டியதாக இருந்தது.
2. நமக்கான பாடம் என்ன ? (வ 3)
    a. "இளைப்புள்ளவர்களாய் ஆத்துவாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு"
        i. இளைப்பு – தளர்வு, சோர்வு, தொய்வு
    b. "சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" – நாம் சோர்வாயிருக்கும் போது கிறிஸ்துவை கவனிப்பது (எபி 3:1; எபி 10:21,22), நினைப்பது நம்மை பலப்படுத்துகிறதாக இருக்கிறது (1 பேது 4:1; 2 கொரி 10:4,5). நம்முடைய எண்ணங்களை கிறிஸ்துவக்குள் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும் (பிலி 2:5; ரோம 6:11)
3. பாவத்திற்கு விரோதமாய் போராடுகிறதில் எதிர்த்து நிற்க வேண்டும் (வ 4)

## II. தேவன் நம்மை நேசிக்கிறார், அதினால் சிட்சிக்கிறார் (12:4-13)

அ. கர்த்தருடைய சிட்சையை குறித்து நாம் என்ன நினைக்க வேண்டும் ? (வ 4-13)

1. "சிட்சை" (CHASTENING) - தண்டனை, வளர்ப்பு, அறிவுறுத்தல், படிப்பித்தல் என்று அர்த்தம் வருகிறது.
2. அற்பமாக எண்ணகூடாது, சோர்ந்து போகா கூடாது (வ 5)
3. நான் தேவனால் சிட்சிக்கப்படுகிறேன் என்பது. அவர் என்னை நேசிக்கிறார் எனவும், என்னை சீர்ப்படுத்துகிற தகப்பனைப்போல என்னை தண்டிக்கிறார் என்பதையும் புரிந்துக்கொள்ள வேண்டும் (வ6,7; 2 சாமு 7:14)

4. தேவன் என்னை சிட்சிக்க வில்லை என்றால் நான் வேசிப்பிள்ளைப்போல் இருப்பதாக புரிந்துக்கொள்ள முடியும் (வ 8)
5. ஆவிகளின் பிதாவாகிய நம்முடைய தேவன் நம்மை சிட்சிக்கும் போது அவருக்கு அஞ்சி, அடங்கி நடக்க வேண்டும் (வ 9)
6. தேவன் நம்முடைய பிரயோஜனத்திற்காக சிட்சிக்கிறார் (வ 10; எபி 31:18)
7. சிட்சையிலிருந்து பாடங்களை கற்றுக்கொண்டு தேவனுக்கு பிரியமாய் நடக்க வேண்டும் (ரோம 5:3,4), அது நமக்கு நீதியாகிய சமாதான பலனை தரும் (வ 11; யாக் 1:13)
8. நம்முடைய வழிகளை செவ்வைப்படுத்த வேண்டும் (வ 12,13).

**III. தேவனுடைய கிருபை இழந்து போன ஏசாவைப் போல இருக்காதீர்கள் (12:14-17)**

அ. நாம் எப்படி இருக்க வேண்டும் என நாட வேண்டும்? (வ 14)

1. யாவரோடும் சமாதானமாயிருக்க (ரோம 12:17,18)
2. பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் (2 கொரி 7:11; 1 தெச 4:3-5)

ஆ. நாம் யாரைப் போல இருக்க கூடாது? ஏன்? (வ 15-16)

1. ஏசாவைப் போல (வ 16-17)
    a. “வேசிக்கள்ளனாகவும்” (வ 16) – பரிசுத்ததிற்கு எதிரானது ( 1 தெச 4:3-5); தன்னை (உடலை) அற்பமான காரியத்துக்கு விற்றுப்போடுகிறவன் ( 1கொரி 6:13,15-20_
    b. ஏசா எப்படி வேசிக்கள்ளனாக இருந்தான்? அவன் தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை (உபா 21:15,16,17), அற்ப ஒரு வேளைப் போஜனத்திற்காக விற்றுப்போட்டான். (ஆதி 25:29-34). அதினால் அவன் சீர்கெட்டவனாக இருந்தான். ஏசா செய்தது ஆவிக்குரிய வேசித்தனம்.
    c. ஏசா தன்னுடைய இரட்டிப்பான ஆசிர்வாதத்தை அலட்சிய பண்ணினதால் (ஆதி 25:34; உபா 21:17) அவனுக்கு என்னானது? (வ17)
        i. ஆசிர்வாதத்தை விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டான் (ஆதி 27:33-38; ரோம 9:12,13)
        ii. கண்ணீர் விட்டு, கவலையோடே தேடியும், மனம்மாறுதலைக் காணாமற்போனான் (ஆதி 27:34,38; லூக் 13:25; மத் 25:10-12)
2. ஏனென்றால் (வ 15)
    a. நாம் தேவனுடைய கிருபையை இழந்துப்போககூடாது
    b. நமக்கு தேவனுடைய கிருபையினால் கிறிஸ்துவுக்குள் அநேக ஆசிர்வாதங்கள் இருக்கிறது (எபி 2:9;எபி 4:15,16; எபி 7:23-27; எபி 8:12; எபி 10:19-21,29; எபி 9:24; எபி 11:39,40). இப்படிப்பட்ட கிருபைகள் நமக்கு கிடைத்திருக்கிறபடியால் அதை இழந்துப்போக கூடாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும் (எபி 4:1; ரோம 6:1; 2 கொரி 6:1)

c. “கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கு முண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாத படிக்கு” பார்க்கவும் உபா 29:18; கொஞ்சம் புளித்த மா எப்படி பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குகிறதோ (1 கொரி 5:6) அதைப்போலவே கசப்பான காரியமும் அநேகரை தீட்டுப்படுத்த வாய்ப்பு இருக்கிறது, பார்க்கவும் (எண் 13:33; எண் 14:2-11)

3. இன்று ஏசாவைப்போல நாம் ஆவிக்குரிய விபச்சாரமும், வேசித்தனமும் செய்ய வாய்ப்பிருக்கிறதா (2 கொரி 11:2; எரே 3:8-9)? ஆம், நம்முடைய மனது கிறிஸ்துவை விட்டு விலகி, வேறே எதாவதற்கு பின் சென்றால் (கள்ள உபதேசம், விக்கிரக ஆராதனை, உலகம்) நாமும் ஆவிக்குரிய விபச்சாரம் செய்ய கூடும், நம்முடைய கிருபை விட்டு விலகிபோக வாய்ப்பிருக்கிறது, ஆகவே எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

## IV. *சீயோன் மலையினிடத்திற்கு வந்திருக்கிறோம் (12:18-24)*

அ. நாம் எங்கே வந்து சேரவில்லை ? (வ 18-21)

1. தொடக்கூடியதும் – மாம்ச பிரகாரமானது (வ 18)
2. அக்கினி பற்றுயெரிகிறதுமான மலை (வ 18)- சீனாய் மலை (யாத் 19:1-25; யாத் 31:18), இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலை பழைய உடன்படிக்கை பெற்றார்கள் (யாத் 30:18; அப் 7:38)
3. மந்தாரம், இருள், பெருங்காற்று (வ 18)
4. எக்காள முழக்கத்தினிடத்திற்கும் (வ 19)
5. வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்தற்கும் வந்து சேரவில்லை (வ 19)
6. சகிக்கமாட்டாதிருந்த கட்டளை (வ 20; யாத் 19:12,13)
7. மோசேயும் பயந்து நடுங்குகிறேன் என்று சொல்லத்தக்கதாக பயங்கரமாயிருந்தது (வ 21)

ஆ. நாம் எங்கே வந்திருக்கிறோம் (வ 22-24)

1. “சீயோன் மலையினிடத்திற்கும்” (வ 22) – சீயோன் மலையானது எருசலேமில் இருந்தது (2 சாமு 5:6-9; சங் 125:1,2); பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வாசஸ்தலமாக குறிப்பிடபட்டுள்ளது (சங் 9:11; 76:2; 87:2; 132:13). சீனாய் மலையிலிருந்து நியாயப்பிரமானம் வந்தது, சீயோனிலிருந்து புதிய ஏற்பாட்டு சபையானது ஆரம்பமானது (எசா 28:16; ரோம 11:26,27; எசா 2:2-3). இன்று நம்முடைய சீயோன் தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகம் (வெளி 14:1)
2. “ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமிடத்திற்கும்” (வ 22) – இது தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரம் (எபி 11:10; எபி 13:10; 2 தெச 1:10; வெளி 21,22); புதிய ஏற்பாட்டின் கீழ் தேவனுடைய வாசஸ்தலம் பூமிக்குரியதாயிராமல், பரலோகத்திற்குரியதாக இருப்பதால் அது மேன்மையுள்ளதாயிருக்கிறது (எபே 1:3; எபே 2:7)
3. “ஆயிரம்பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்” (வெளி 5:11; எபி 1:14); நமக்கு பணிவிடை செய்பவர்கள் எண்ண முடியாதவர்கள் தேவனே உமக்கு நன்றி

4. பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபை (வ23) – சபையில் இருக்கிறவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது (பிலி 4:3). கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்கள் முதற்பலன்களாய் இருக்கின்றன (யாக் 1:18). இயேசு முதற்பேறானவர் (கொலே 1:18), அவருடைய சரீரத்தில் அவயங்களாய் இருக்கிற நாதே முதற்பேறானர்வளாய் இருக்கிறோம்.
5. "யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும்" (வ 23; 1 பேது 1:17)
6. பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும் (வ 23)- நீதிமான்கள் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டவர்கள் (வெளி 7:13,14; 1 கொரி 6:11). நம்முடைய ஐக்கியம் என்பது சாதாரணமான ஒன்று அல்ல.
7. "புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும் (வ 24; எபி 8:6; 1 தீமோ 2:5,6)
8. "நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தமாகிய" (வ 24; எபி 9:12-15); இயேசுவின் இரத்தம் நன்மையானவைகளை நமக்காக பேசுகிறது (எபி 9:20-24)

**V. எச்சரிப்பு 5 : (12:25-24)**

அ. நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டிய காரியங்கள் என்ன? ஏன்? (வ 25-29)

1. பேசுகிறவருக்கு நீங்கள் செவிக்கொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள் (வ 25)
   a. நம்மோடு பேசினது/பேசுகிறது யார்? (எபி 1:2; எபி 2:3) தேவன் இயேசுவை கொண்டு அப்போஸ்தலர்கள் மூலமாய் பேசுகிறார்; நம்மோடு இயேசுவின் புதிய ஏற்பாடு பேசுகிறது, அதை விட்டு விலக கூடாது.
   b. பரலோகத்திலிருந்து பேசிகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப்போம் (எபி 2:1-3)
2. ஏனென்றால்:
   a. நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் (வ 29)

ஆ. தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருப்பதால் நாம் எசய்ய வேண்டியது என்ன? (வ 20)

1. நம்முடைய ராஜ்யம் அசைவில்லாதது (வ 28; தானி 2:44; லூக் 1:32,33; மத் 16:18)
2. நாம் பயத்தோடும், பக்தியோடும், தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்ய வேண்டும்
3. அதற்கு கிருபை பற்றிக்கொள்ள வேண்டும்.

**கருத்து:** தேவன் நமக்கு கொடுத்திருக்கிற கிருபை மிகப் பெரியது, மேன்மையான ஆசிர்வாதங்களையும், வாக்குத்தத்தங்களையும் கிறிஸ்துவுக்குள் கொடுத்திருக்கிறார், ஆகவே அந்த கிருபை நாம் பற்றிக்கொள்ள வேண்டும், அதை விட்டு விலக கூடாது (ரோம 11:22)

## அதிகாரம் 13

## எபிரெயர் 13:1-25

### I. நடை முறை கிறிஸ்தவ வாழ்க்கைக்கான போதனை (13:1-9)

அ. எபிரெயர் 13:1-9 -யில் நமக்கான போதனைகள் என்னென்ன?

1. சகோதர சிநேகம் நிலைத்திருக்க வேண்டும் (வ 1; 1பேது 1:22)
2. அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள் (வ 2; 1 பேது 4:9) பார்க்கவும் ஆதி 33:10; ஆதி 18:1-14
3. நாமும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து தீங்கநுபவிக்கிறவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும் (வ 3; எபி 4:15; ரோம 12:14-16; லூக் 6:31)
4. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயிருக்கிறது; விவாக மஞ்சத்தை அசுசிப்படாததாயுமயிருக்க வேண்டும் (வ 4; 1 கொரி 7:2,3)
5. பண ஆசையில்லாதவர்களாய் வாழ வேண்டும்
6. கர்த்தர் நமக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் என்பதினால் நாம் தைரியமுடையவர்களாய் இருக்க வேண்டும் (வ 6)
7. நம்மை நடத்தினவர்களை (மூப்பர்கள்) நினைத்து, அவர்களை நடக்கையின் முடிவை நன்றாய் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்ற வேண்டும்.
8. பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருக்க வேண்டும், தேவனுடைய கிருபையினாலே இருதயம் ஸ்திரப்பட வேண்டும் (வ9)

### II. தேவனுக்கு பிரியமான பலியை செலுத்துவோம் (13:10-16)

அ. நமக்கு என்ன இருக்கிறதாக எபிரெய ஆசிரியர் 10 – வசனத்தில் குறிப்பிடுகிறார்?

1. "நமக்கு ஒரு பலிபீடமுண்டு" – இது ஆவிக்குரிய பலிபீடமாக இருக்கிறது, நம்முடைய பலிபீடம் பூமிக்குரியது அல்ல. கிறிஸ்து நமக்காக பலியாக கொடுக்கப்பட்டார் (எபி 9:14; எபி 10:10; எபே 5:2). கொலே 1:20 -யில் இயேசு "சிலுவையில் சிந்தின இரத்தம்" என நாம் வாசிக்கிறோம், இயேசு எருசலேமின் வாசல்களுக்கு வெளியே கொல்கதாவில் பலியிடப்பட்டார் (வ 12, யோவா 19:16-20). கிறிஸ்தவர்களும் தங்களே தாங்களே பலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள் (ரோம 12:1,2). ஞானஸ்நானத்தில் நம்முடைய பழைய மனிதன் இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்டான் என ரோமர் 6:6 யிலும் கலா 5:24-யிலும் வாசிக்கிறோம்.
2. நமக்கு அதிகாரமிருக்கிறது – பழைய ஏற்பாட்டுக் கூடாரத்தில் ஊழியஞ் செய்கிறவர்களுக்கு நாம் அனுபவிக்கிறவைகளில் உரிமையில்லை. ஆனால் நமக்கு உரிமை இருக்கிறது.

ஆ. பழைய ஏற்பாட்டில் பாவங்களினிமித்தமாகப் எந்த மிருகங்களின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படும்(வ 11; லேவி 6:20); இயேசுவும் அவருடைய இரத்ததினால் நம்மை சுத்திகரிக்க நகரவாசலுக்கு புறம்பே கொல்கதாவில் பலியிடப்பட்டார் (வ12; யோவா 19:16-20); இப்பொழுது நாம் செய்ய வேண்டியது என்ன?(வ13-14)

1. "நாம் அவருடைய நிந்தையை சுமந்து" (வ 13; லூக் 9:23) – இயேசு நமக்காக சிலுவை சுமந்து, சிலுவையில் இரத்தம்சிந்தி பலியிடப்பட்டார். அவர் தன்னைதானே வெறுத்து (லூக் 22:42; பிலி 2:5-8), தேவனுக்கு பிரியமான பலியாக தன்னை ஒப்புக்கொடுத்தது போலவே (எபே 5:2), ஆசாரியர்களாகிய (கிறிஸ்தவர்கள்) நாமும் நம்மையும் ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோம 12:1,2; லூக் 9:23; கலா 2:20; கலா 5:24).
2. "பாளயத்துக்குப் புறம்மே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்"- நாம் நம்முடைய பலியாகிய இயேசுவை பின் தொடர வேண்டும் (வெளி 14:4; லூக் 9:23). அவர் நமக்கான அடிச்சுவடுகளை பின் வைத்து சென்றியிருக்கிறார், அந்த அடிச்சுவடுகளை நாம் பின்பற்ற வேண்டும் (1 பேது 2:21). நாமும் பலியாக இருப்பதால் நாமும் நகரத்திற்கு புறம்பே போக வேண்டும்.
3. "வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம்" (வ 14) – ஆபிரகாமைப்போலவே, மோசேயை போலவே (எபி 11:9,10,13-16, 26), நாமும் வரப்போகிற நகரத்தை தேட வேண்டும். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை.
4. நாம் ஆசாரியர்களாய் இருப்பதால் (1 பேது 2:5), தேவனுக்கு பிரியமான பலியை செலுத்த வேண்டும் (வ 13:15-16).
    a. நாம் இன்று செலுத்தும் ஆவிக்குரிய பலிகள் என்னென்ன? (1 பேது 2:5)
        i. நம்மை நாமே பலியாக கொடுக்கிறோம் (வ 13; ரோம 12:1; கலா 5:24)
        ii. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி (வ 15)
        iii. நன்மை செய்தல், தானதர்மம் பண்ணுதல் (வ 16; கலா 6:10)

    **கருத்து:** இதில் நாம் செலுத்தும் பலிகள் தேவனுக்குப் பிரியமானதாக இருக்க வேண்டும்; நம்முடைய பலிகள் ஊனமாயும், குறைகள்ளதாகவும் இருக்க கூடாது, நம்முடைய பலி முழுமையானதாக இருக்க வேண்டும் (லேவி 1:2-3; லேவி 22:21,22)

**III. நிறைவான புத்திமதிகள் (13:17-25)**

அ. மூப்பர்களை பற்றி கூறப்படும் காரியங்கள் என்ன?(வ 17)

1. மூப்பர்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்கள்.
2. அவர் விழித்திருக்க வேண்டும் (அப் 20:28-31)
3. அவர்கள் சந்தோஷத்தோடே செய்ய நாம் (சபையார்) அவர்களுக்கு கீழ்படிந்து அடக்க வேண்டும்
4. மூப்பரிகள் துக்கத்தோடே அப்படி செய்தால் அது நமக்கு(சபையாருக்கு) பிரயோஜனமாயிருக்கமாட்டாது.

ஆ. எபிரெய ஆசிரியர் எதற்காக தங்களுக்காக வேண்டிக்கொள்ளும் படி கேட்டுக்கொண்டார்? (வ18-19) அதி சீக்கரமாய் அவர்களிடம் (இந்த நிருபத்தை பெற்றுக்கொண்டவர்களிடம்) வரும்படி

இ. இந்த நிருபத்தின் ஆசிரியரின் கடைசியான காரியங்கள் என்னவாக இருந்தது? (வ 20-25)

1. இந்த புத்திமதிகளை பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும் படி (வ 22)
2. தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டதை குறித்தும் (வ 23)
3. கிருபையானது உங்களனைவரோடுங் கூட இருப்பதாக – நிறைவான வாழ்த்துதல் (வ25)